

நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)



வாணுதல் உமையாள் ஆகி, வனத்தினை விட்டு வந்து,
காணரும் தெய்வ மாகிக் கண்டர மாணிக் கத்தில்
பேணிடும் நகரத் தார்கள் பெருமையை வளர்த்துக் காக்கும்
மாணிக்க நாச்சி யம்மன் மலரடி போற்றி போற்றி

ஜூலை 1992



நெற்குப்பை தி. கனகசபை செட்டியார் அவர்களின் பேத்தியும் வலையபட்டி திரு. மு. அரு. மு. முத்துராமன் செட்டியாரின் புதல்வியுமான செல்விக்கும் நெற்குப்பை திரு. ந. பழ. சோம. பழநியப்ப செட்டியாரின் புதல்வன் இராமநாதன் B. B.A. க்கும் 10-6-92 அன்று வலையபட்டியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. மணமக்களுடன் திரு. தி கனகசபை செட்டியாரும் திரு. வி.என். சிடி. யும்.



மேலைச்சிவபுரி திரு. இராம. பழநியப்ப செட்டியாரின் புதல்வரும் வழக்கறிஞருமான திரு. பழ. இராமசாமி B.A.B.L. (M L.) க்கும் விரையாச்சிலை திரு. மீ. சிதம்பரம் செட்டியாரின் புதல்வி ஜானகி என்கிற ஷீலாவிற்கும் 11-6-92 அன்று விரையாச்சிலையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. மணமக்களுடன் தமிழக அமைச்சர் மாண்புமிகு எஸ். ரகுபதியும் திரு. இரா. சொக்கலிங்கமும்.

உ
சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)

குரல் 11
ஒலி 6
ஆங்கிரஸ
ஆனி
ஜூலை
1992

அங்கணா போற்றி வாய்மை ஆரணா போற்றி நாக
கங்கணா போற்றி மூல காரணா போற்றி நெற்றிச்
செங்கணா போற்றி ஆதி சிவபரஞ் சுடரே போற்றி
எங்கள்நா யகனே போற்றி ஈறிலா முதலே போற்றி.
— பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல் புராணம்

ஆசிரியர்:
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
சுப. அ. நடராசன் செட்டியார்

துணை ஆசிரியர்:
எல். சுந்தரம்

அலுவலகம் :
20, கிருஷ்ணபுரம் 4 ஆவது குறுக்குத் தெரு,
மதுரை-625 009

தொலைபேசி p. p. 32084

ஆண்டுச் சந்தா ரூ. 30-00 டெபாசிட் சந்தா ரூ. 300-00


கன்னியர்கள் வாழ்வுபெற மாலை
காளையர்கள் வாழ்வுயர வேலை


சிதம்பர இரகசியம்

மனிதன் தன் வாழ்நாளில் எதை அடையவேண்டுமென்று ஆசைப்படுகிறானோ அது அவன் உள்ளேயே இருக்கின்றது. இதை உணராமல் அவன் வெளியே தேடி வருகிறான். அதனால் உள்ளத்தை கோவிலாக்குவதற்குப் பதிலாக தீய குணங்கள் என்ற விலங்குகள் உள்ள காடாக மாற்றிவிடுகிறான். உள்ளத்தைக் கோவிலாக மாற்றுவதற்குத்தான் கோவிலை உருவாக்கினார்கள்.

எல்லாம் வல்ல இறைவன் தனக்கென்று ஒரு உருவமும் பெயரும் உடையவன் அல்லன். ஆயினும் நம் பொருட்டு எம் பெருமான் பல உருவங்களும் பல பெயர்களும் கொண்டு விளங்கி அருள்கின்றான். அவ்வாறு சிவபெருமான் உயிர்களின் பொருட்டு அருளிய திருஉருவங்கள் பலவற்றுள் மிகவும் சிறந்தது நடராஜ வடிவம் ஆகும்.

தில்லை கோவில் உலகத்துக்கே கோவிலாகும். கோவில் என்றாலே தில்லையைத்தான் குறிக்கும். மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றிலும் விளங்குவது சிதம்பரம்.

நடராஜப் பெருமானின் ஆனந்த தாண்டவத்தில் படைத்தல், காத்தல், அழித்தல் மறைத்தல், அருளுதல் என்ற ஐந்தொழில்களும் அமைந்துள்ளன. இந்தத் தாண்டவமானது உலகம் தோன்றிய காலம் முதற்கொண்டு நடைபெறுகின்றது. இறைவனது முழுமையான விளக்கம் அமைந்த இடம் சிதம்பரம். மொழிக்கெல்லாம் ஆதாரமாகிய ஒளித் தோற்றம் தோன்றியதும் சிலம்பொலியாகிய பரத நாதம் தோன்றியதும் இத்தலத்தில் ஆகும்.

இங்கே இறைவனை உருவம், அருவம், அருஉருவம் என்ற மூன்று வகையிலும் காண்கிறோம். ஸ்ரீ நடராஜர்-உருவம்; ஸ்ரீ ஸ்படிக லிங்கம்-அருஉருவம்; ஸ்ரீ ரகசியம் - அருவம்.



தில்லையில் ஐந்து சபைகள் உள்ளன. ஆனந்தத் தாண்டவம் நடைபெறும் சபை சித் சபை ஆகும். இது மட்டும் அல்லாமல் கனக சபை, தேவ சபை, நிருத்த சபை, ராஜசபை என்பன மற்ற நான்கு சபைகள். சித் சபை மரத்தால் கட்டப்பட்டது. இச்சபையை திருச்சிற்றம்பலம் என்பர். ஸ்ரீ நடராஜப் பெருமானும் அவருடைய இடப்பக்கத்தில் சிவகாம சுந்தரி அம்மையும் இருக்கும் கருவறை தங்க ஓடுகளால் வேயப் பெற்று இருக்கின்றது. இதில் ஒன்பது தங்கக் கலசங்கள்

உள்ளன. அவை ஒன்பது சக்திகள் ஆகும். அதில் உள்ள கைமரங்கள் அறுபத்தி நான்கு கலைகள் ஆகும். மனிதன் ஒவ்வொரு நாளும் விடும் சுவாசங்களின் எண்ணிக்கை ஆகும் 21,600 ஓடுகள். அதற்கு பொருத்தப்பட்ட 72,000 ஆணிகள் நம்முடைய சுவாச சஞ்சார ஆதாரமான நாடிகளின் எண்ணிக்கைகளாகும். நமது இதயத்தில் இருக்கின்ற கடவுளே இங்கும் இருக்கிறார் என்பதை அறியவே நமது உடல்பால் அமைந்து உள்ளது. இச்சபையில் உள்ள ஒவ்வொரு தங்க ஓட்டிலும் ''சிவாய நம'' என்ற பஞ்சாட்சரம் எழுதப்பட்டுள்ளது.


சித் சபையில் ஸ்ரீ நடராஜப் பெருமானின் வலப்பக்கத்தில் சிதம்பர இரகசியம்- அதாவது ஆகாயலிங்கம் மந்திர உருவமாக திருஅப்பலசக்கரத்துடன் அமைக்கப்பட்டு உள்ளது. தங்க வில்வ மாலை திருஅம்பலசக்கரத்தின் முன்னே தொங்க விடப்பட்டுள்ளது.

பஞ்ச பூதங்களில் முதலாவது பூதம், ஆகாயம் ஆகும். இதன் குணம் ஒலி ஆகும். ஒலி வடிவத்தில் இறைவனை நாதபிரமம் என்கிறார்கள். மனிதனின் உடல், மனம், புத்தி இவை மூன்றும் ஒருங்கிணைந்தால் மட்டுமே அவனிடத்தில் ஒளிந்து இருக்கின்ற ஞான ஒளி வடிவமான, ஆனந்த நடனம் ஆடுகின்ற சிதம்பரஇரகசியத்தை உணர்ந்து அனுபவிக்க இயலும்.

நமது மூச்சும் அதனைத் தாங்குகின்ற நாடிகளும் ஐந்தெழுத்து நாமத்தால் பரிசுத்தி அடைகின்றன. நடராஜப் பெருமானின் உருவத்தை தியானிப்பதால் மனம் மாசுகளிலிருந்து விடுபடுகின்றது. சுத்தமான உடல், மனம், புத்தி இவைகளால் பிரம்ம ஞான வடிவமாகிய சிதம்பர இரகசியத்தை நாம் அடைகின்றோம்.

இதற்கு, எம்மை ஆட்கொண்ட கொற்றவாளீஸ்வரர் திருநெல்லைத்தாயின் திருவருளால் அனைவரும் உடல் நலமும் மனநலமும் சர்வ ஐஸ்வர்யங்களும் பெற்று வாழ்வாங்கு வாழ வாழ்த்துகிறேன்.

(கோவிலூரில் 6—6—92 அன்று நடைபெற்ற சிந்தனைப் பூங்கா நிகழ்ச்சியில் கோவிலூர் ஆண்டவர் மன்றத்தின் தலைவர் தவத்திரு காசி விஸ்வநாத ஞான தேசிக சுவாமிகள் ஆற்றிய ஆசியுரை.)



மதுரையில் 20-6-92 அன்று நடைபெற்ற விழாவில் திரு. தமிழருவி மணியனின் ''கண்ணதாசன் கவிதைகள் ஒரு கண்ணோட்டம்'' ஒலிப் பேழையை திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் வெளியிட, பேராசிரியை இளம்பிறை மணிமாறன் பெற்றுக் கொள்ளும் காட்சி. அருகே திரு. தமிழருவி மணியன், திரு. அரு. நாகப்பன், திரு. இரா. சொக்கலிங்கம்.

பாகனேரி செல்வ விநாயகர் கோவில்

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் பாகனேரி பழைய வளவில் அமைந்துள்ள சுமார் நூறு ஆண்டுகட்கு முற்பட்ட மிகவும் தொன்மை வாய்ந்த அருள்மிகு செல்வ விநாயகர் கோவிலை பாகனேரி சுப. வே. மாணிக்கம் செட்டியார் அவர்கள் தமது செலவில் திருப்பணி செய்து வருகிறார்கள். அத்திருக்கோவிலுக்கு முன்பக்கம் மண்டபம் எழுப்பியும் புதிதாகக் கோபுரம் அமைத்தும் பிரகாரத்தில் விநாயகர், முருகன் சுவாமிகளை அமைத்தும் மதில் சுவர் அமைத்தும் வருகிறார்கள். திருப்பணி வேலைகளை முடித்து ஆவணி மாதம் திருக்குட நன்னீராட்டு விழா நடத்தவும் அதனையொட்டிச் சிறப்புமலர் ஒன்று வெளியிடவும் திட்டமிட்டு வருகிறார்கள்.

காவிரிப்பூம்பட்டினத்தில் கிராமியப் பாடல்கள் பற்றிய பேச்சு

காவிரிப்பூம்பட்டினத்தில் நடைபெறவுள்ள பட்டினத்தடிகளின் அற்புதத் திருவிழாவைக் காண டாக்டர் திரு நவநீத கிருஷ்ணனும் டாக்டர் திருமதி விஜயலெட்சுமி நவநீதகிருஷ்ணனும் காவிரிப்பூம்பட்டினம் செல்கின்றனர். அங்கு 9-8-92 ஞாயிறு மாலை திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் தலைமையில் அவர்கள் 'கிராமியப் பாடல்கள்' எனும் தலைப்பில் பேசுவதோடு ஒரு சில கிராமியப் பாடல்களைப் பாடவும் உள்ளனர்.

பதிப்புச் செம்மலுக்கு ஆசிரியர் எழுதிய கடிதம்

பதிப்புச் செம்மல் டாக்டர் ச. மெய்யப்பன் அவர்கள்.
சிதம்பரம்.



அன்புடையீர்,

வணக்கம். தங்களின் 59 ஆம் ஆண்டு நிறைவு விழா அழைப்பிதழ் கிடைக்கப் பெற்று மிக்க மகிழ்ச்சி அடைந்தேன்.

தேனீயைப் போல சுறுசுறுப்பு மிக்க தங்களுக்கு 59 வயது ஆகிறது என்பதை அழைப்பிதழைப் பார்த்துத் தான் தெரிந்து கொண்டேன். இது வரை தங்கள் வயது 29 என்றுதான் நினைத்திருந்தேன்.

நகரத்தார்களில் 2வது இளைஞர் தாங்கள். 87 வயது நிரம்பிய முதல் இளைஞர் தங்கள் மாமனர், என்னுடைய இனிய நண்பர். ஆத்தங்குடி விகடம் காசிச் செட்டியார் அவர்கள். நூலைப் போல சேலை என்பார்கள். சுறுசுறுப்பில் மாமனாரைப் போல மாப்பிள்ளை.

முருகனுக்கு வாகனம் மயில். மயிலேறி உலகை வலம் வந்து அருள் பாலிப்பார் முருகப் பெருமான். பதிப்புச் செம்மலுக்கு வாகனம் அம்பாசிடர் கார். கார் ஏறி, தமிழகத்தை வலம் வந்து தமிழையும் ஆன்மீகத்தையும் பரப்புவார், பதிப்புச் செம்மல்.

தங்களுக்கு ஆசி அருள திரு. பழ. சண்முகம் அழைப்பு விடுத் திருந்தார்கள். ஆசி அருள எனக்கு வயதில்லை. விழாவுக்கு வந்து ஆசி பெற மகிழ்ச்சியோடு இருந்தேன். இடையறாத பணிகளின் காரணங்களினால் வர, ஆசி பெற, வாய்ப்புப் பெற்றேனில்லை. அத னால் என்ன? மணி விழாவில், சதாபிஷேக விழாவில் 100வது ஆண்டு நிறைவு விழாவில் வந்து கலந்து கொண்டு ஆசி பெற்றுக் கொள்கிறேன்.

ஈட்டல், காத்தல், வகுத்தல் என்று நகரத்தார்கள் மரபுப்படி வாழ்ந்து வருகிற தாங்கள் எல்லா நலன்களும் பெற்றுப் பெருவாழ்வு வாழ அன்னை மீனாட்சியையும் திருக்கடவூர் அருளுருவ அபிராமி அம்மை உடனாய அமிர்த கடேசுவரரையும் வணங்குகிறேன்.

அன்புள்ள,

24-6-92 வி. என். சிதம்பரம்

காவிரிப்பூம்பட்டினத்தில் பட்டினத்தடிகளின் அற்புதத் திருவிழா

காவிரிப்பூம்பட்டினத்தில் திருவெண்காடராகிய பட்டினத் தடிகளின் அற்புதத் திருவிழா வழக்கம் போல் இந்த ஆண்டும் நடைபெற உள்ளது. ஆங்கிரஸ ஆண்டு ஆடி மீ 18௨ (2-8-92) முதல் ஆடி மீ 29௨ (13-8-92) வரை 12 நாட்கள் இத் திருவிழா கொண்டாடப்பட உள்ளது.

நிகழ்ச்சி விவரம்

2-8-92 ஞாயிறு (1 ஆம் திருவிழா) இரவு அனுக்ஞை விக்னேசுவர பூஜை. திருவெண் காடர் திருஅவதாரம்.

3-8-92 திங்கள் (2 ஆம் திருவிழா) காலை திருவெண்காடர் திருவெண்காட்டிற்கு எழுந்தருளுதல். பகல் ஞானாசிரியரோடு மணிகர்ணிகையில் சங்கற்ப ஸ்நானம் செய்து சிவதீட்சை பெற்றுக் கொள்ளுதல்.

4-8-92 செவ்வாய் (3 ஆம் திருவிழா) காலை திருவெண்காடர் முக்குள ஸ்நானம். இரவு திருவெண்காடர் திருக் கல்யாணம். முத்துப் பல்லக்கில் வலம் வருதல்.

5-8-92 புதன் (4 ஆம் திருவிழா) காலை மருதவாணர் குழந்தையாய் வெள்ளி விமானத்தில் எழுந்தருளல். இரவு பல்லவனீச்சுரத்தில் குழந்தையின் நிறைக்குப் பொன் நிறுத்துக் கொடுத்தல். வெள்ளிக் கட்டிலில் தாலாட்டல்.

6-8-92 வியாழன் (5 ஆம் திருவிழா) மருதவாணர் வித்தியாப்பியாசம். மாலை கடற்கரை செல்லல். துறவடைதல். சேந்தனருக்கு விலங்கிடல்.

7-8-92 வெள்ளி (6 ஆம் திருவிழா) மாலை பட்டினத்தடிகள் உருத்திராக்க விமானத்தில் பிட்சைக் கெழுந்தருளல். இரவு நஞ்சு கலந்த அப்பம் அளித்தலும் விடு தீப்பற்றுதலும் (இன்று மாலை திருவிளக்குப் பூஜை நடைபெற உள்ளது.)

8-8-92 சனி (7 ஆம் திருவிழா) ஞானகலாம்பிகை பரிபூரணமடைதல். இரவு முத்துச் சிவிகையில் மயானம் சேர்தல். சுவாமியும் அம்மனும் இடபாரூடராய் எழுந்தருளி மோட்சம் கொடுத்தல்.

9-8-92 ஞாயிறு (8 ஆம் திருவிழா) திருவாரூர்ப் பிள்ளையைப் பிழைப்பித்தல். இரவு பல்லவனீச்சுரத்தில் கழுமரம் எரித்தல்.

10-8-92 திங்கள் (9 ஆம் திருவிழா) பத்திரகிரியாரும் நாயடியாளும் அடிகள் அருளால் மோட்சமடைதல். தங்கப் பேய்க் கரும்பு தாங்குதல்.

11-8-92 செவ்வாய் (10 ஆம் திருவிழா) காலை பட்டினத்தடிகள் குருபூஜை. சேந்தனர் விலங்கு தெறித்தல் ருத்ராபிஷேகம். இரவு பஞ்சமூர்த்திகளும் பட்டினத்தடிகளும் திரு வீதி வருதல்.

12-8-92 புதன் (11 ஆம் திருவிழா) காலை பஞ்சமூர்த்திகளும் திருவெண்காடரும் இடப வாகனக் காட்சியுடன் கடற்கரைக்கு எழுந்தருளி தீர்த்தம் கொடுத்தல்.

13-8-92 வியாழன் (12 ஆம் திருவிழா) ருத்ராபிஷேகமும் விடையாற்றியும்.

தமிழருவி மணியனின் ஒலிப்பேழை வெளியீட்டு விழா

திரு. தமிழருவி மணியனின் ''கண்ணதாசன் கவிதைகள் ஒரு கண்ணோட்டம்'' என்ற ஒலிப் பேழை (கேசட்) வெளியீட்டு விழா 20-6-92 மாலை மதுரை ரீகல் திரையரங்கு திறந்த வெளிக் கலையரங்கில் மதுரை கவியரசு கண்ணதாசன் நற்பணி மன்றத்தின் தலைவர் 'புன்னகை மன்னன்' திரு. இரா. சொக்கலிங்கம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. மதுரை வானொலி நிலைய இயக்குநர் செல்வி லீலா அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

திரு. ஆர். இரவிச்சந்திரன் வரவேற்புரை நிகழ்த்த, திரு. இரா. சொக்கலிங்கம் தலைமை உரை நிகழ்த்தினார்.

நமது இதழின் ஆசிரியர் 'மீனாட்சி திருமைந்தன்' திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் மேற்படி ஒலிப் பேழையை வெளியிட நாவுக்கரசி பேராசிரியை இளம்பிறை மணி மாறன் பெற்றுக் கொண்டார். பின்னர் செல்வி லீலா அவர்கள் உரையாற்றினார்கள்.

அடுத்து தொழிலதிபர் திரு. ஆறுமுகசாமி பேராசியர் திரு. த. ராஜாராம், முனைவர் திரு. இரா. மோகன், மக்கள் கவிஞர் திரு. அரு. நாகப்பன், திரு. வி. என். சிதம்பரம் செட்டியார், திருமதி இளம்பிறை மணிமாறன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் சிறப்புரையாற்றினார்கள்.

இவ்விழாவில் தவத்திரு அடிகளாருக்கு திரு. வி. என். சிடி. அவர்களும் திரு. தமிழருவிமணியன் தலைவர் திரு. இரா. சொக்கலிங்கம் ஆகியோருக்கு தவத்திரு அடிகளார் அவர்களும் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்கள்.

திரு. தமிழருவி மணியனின் ஏற்புரைக்குப்பின் திரு. சி. கிருஷ்ணமூர்த்தி நன்றி கூறினார்.

விழாவில் தமிழன்பர்கள், இலக்கியவாதிகள் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

எனது ஆலய அனுபவங்கள்

வி.என். சிதம்பரம்

— 13 —

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவில் கட்டளைகளிலேயே அதிகமானது மன்னர் திருமலை நாயக்கர் கட்டளைதான். அதற்கு அடுத்தபடி அதிக்க் கட்டளைகள் ஏற்படுத்திய பெருமை அமராவதி புதூர் வயிநாகரம் குடும்பத்தாரையே சேரும். வயிநாகரம் குடும்பத்தைச் சார்ந்த புதல்வர்கள் நால்வரும் ஆன்மீகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்கள் என்றாலும், நாகப்ப செட்டியார், வெங்கடாசலம் செட்டியார் இருவரும் இறைப்பணியில் முழு நேரமாகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டார்கள். வெங்கடாசலம் செட்டியார் வழக்கம்போல் அன்னை மீனாட்சியம்மையை வணங்கச் சென்றபோது நாய் ஒன்று பிரகாரச் சுவற்றின் மீது சிறுநீர் கழித்துக் கொண்டிருந்ததைப் பார்த்து ''மதிற் சுவர் சிவச்சின்னமல்லவா? நாய் அசிங்கப்படுத்திவிட்டதே'' என்று மனம் வருந்தி உடனடியாக ஆலயத்தின் மதிற் சுவற்றின் சுற்றுப்புற இடத்தை விலைக்கு வாங்கி, அங்குக் குடியிருந்தவர்களை காலி செய்து, ஆலயத்தைச் சுற்றிலும் இரும்பு வேலி அமைத்து, நந்தவனத்தை உருவாக்கி, ஆலயத்தில் புனிதத் தன்மையை நிலைநாட்டி மகிழ்ந்தார்கள்.

இதனைத் தொடர்ந்து வயிநாகரம் குடும்பத்தினர் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரருக்கு திருக் கல்யாண மண்டபம் கட்டினர். (இம் மண்டபத்தில் வயிநாகரம் நாகப்பா ஐயா, வெங்கடாசலம் ஐயா ஆகியோரின் திருவுருவப் படம் வைக்கப் பட்டுள்ளதை இன்றும் காணலாம்) அன்னை மீனாட்சியம்மைக்குத் தங்கத்தில் தாம்பாளம், கிண்ணம், பன்னீர்ச் செம்பு, மற்றும் பூஜைச் சாமான் களைச் செய்து கொடுத்தனர். ஆடிவீதியில் கல்தள வரிசையைப் பதித்தனர். பல்லாண்டுக் காலமாக மொட்டையாக நின்ற கோபுரத்தைக் கட்டி முழுக் கோபுரமாக்கினார்கள். அதுதான் இன்று 'மொட்டைக் கோபுரம்' என விளங்கி வருகிறது. 150 ஆண்டுகட்கு முன்பு இவையனைத்திற்கும் ரூ. 25 இலட்சம் செலவாகியுள்ளது. அன்றைய சூழ்நிலையில் பவுன் ரூ. 13½-க்கு விற்றபோது அவர்கள் செய்த தர்மம் 25 இலட்சம் என்றால் பவுன் விலை ரூ. 3500- விற்கின்ற இன்றைய சூழ்நிலையில் அந்தத் தனிக் குடும்பம் செய்த தர்மம் 673 கோடி ரூபாய் ஆகிறது. அதனால்தான் நகரத்தார்களை மன்னர் பின்னோர் என்று பாராட்டினார்கள். திருப்பணிச் சான்றோர் வரிசையில் இங்கு முதலில் மன்னர் திருமலை. அடுத்து வயிநாகரம் குடும்பத்தார்.

மொட்டை கோபுரமும் முழுக் கோபுரமும்

150 ஆண்டுகட்கு முன்பு மொட்டையாக நின்ற கோபுரத்தை முழுக் கோபுரமாகக் கட்ட வேண்டுமென முடிவு எடுத்து அதற்கானபணிகளில் வயிநாகரம் நாகப்பசெட்டியார் அவர்கள் முழுமூச்சாக இறங்கியபோது கொத்தனார்களும், சித்தாள்களும் ''இவ்விடத்தில் முனி இருக்கிறது. அது அடித்துவிடும்'' என உயிருக்கு அஞ்சிப் பணி செய்ய முன்வரவில்லை. இதனைக் கண்ட வயிநாகரம் நாகப்ப செட்டியார் அவர்கள் இலட்சக் கணக்காக பணத்தைக் கொட்டிய தோடல்லாமல், அனைவருக்கும் எடுத்துக்காட்டாக கோபுரம் கட்டும் பணியில் தனது திருக்கரத்தால் முதற் செங்கலை எடுத்து வைத்துப் பணியைத் தொடங்கி வைத்தார். அதனைத்தொடர்ந்து பணியாட்கள் அனைவரும் முன் வந்து கோபுரம் கட்டும் பணியை தொடர்ந்தார்கள். தன் உயிரைப் பணயமாக வைத்து இந்தத் திருப் பணியைத் தொடங்கினார் செட்டியார்.

உண்மையான பகுத்தறிவு வாதி அவர்தான். நல்ல காரியம் செய்யும்போது முனி அடித்துவிடு மென்றால் அது மூட நம்பிக்கை. அப்படியே போனாலும் என்றாவது போகின்ற உயிர் இறைப் பணியில் போனால் பயன்படும் என்ற உறுதிப்பாட்டுடன் செயலாற்றினார். முனியும் அடிக்கவில்லை; மொட்டைக்கோபுரமும் முழுக் கோபுரம் ஆயிற்று!

64 நாயன்மார்களில் தலையானவர்கள் நால்வர். அந்நால்வரில் திருநாவுக்கரசருக்குச் தனிச் சிறப்பு உண்டு. நாவுக்கரசர் தன் கரங்களில் எப்போதும் தூய்மை படுத்தும் உழவாரம் என்ற கரு



அமராவதி புதூர்
வயிநாகரம் நாகப்பா அய்யா



அமராவதி புதூர் வயிநாகரம்
வெங்கடாசல அய்யா

வியை வைத்திருப்பார். அதன் மூலம் சுற்றுப்புறங்களைத் தூய் மைப் படுத்திக் கொண்டே இருப் பார். அவரைப் போன்றே வயி நாகரம் நாகப்ப செட்டியார் உழ வாரப்படை கொண்டு ஆல யத்தை அவ்வப்போது தூய்மைப் படுத்திக் கொண்டேயிருந்தார். ஆன்மீகத்திற்கு இது போன்ற வியக்கத்தகு அருஞ்சாதனைகளை ஆற்றியவர்கள் வயிநாகரம் நாகப்ப ஐயா அவர்கள்.

நாகப்ப செட்டியாரின் சபதம்

அவர்கள் நாள்தோறும் இரு முறை காலையும் மாலையும் உழவாரப்பணியை முடித்து விட்டு அன்னை மீனாட்சியம்மையைத் தரிசிப்பது வழக்கம். ஆலயத் திற்கு அவர் வழங்கிய தங்க தாம்பாளத்திலேயே அவருக்குப் பிரசாதம் வழங்கி வந்தனர் ஆலய நிர்வாகத்தினர். அப்பிர சாதத்தை உண்டு விட்டு இரவு உறங்கி விடுவார். இதனையே அவரது வாழ்க்கையின் இலட்சிய மாகக் கொண்டு வாழ்ந்து வந் தார். இந்நிலையில் திடீரென மீனாட்சியம்மன் திருப்பணிக் காக, ஒரு பழைய கடனை வசூ லிக்க நாகப்ப செட்டியார் வெளி யூர் சென்றிக்கிறார். பணி முடி யாததாலும், அந்தக் காலத்தில் மாட்டு வண்டியில்தான் செல்ல வேண்டியிருந்ததாலும் மதுரைக்கு உடனடியாகத் திரும்ப முடியாமற் போய்விட் டது. சென்ற ஊரில் ஒரு வீட்டுத் திண்ணையில் தங்கி விட்டார். காலையும், மாலையும், அன்னை மீனாட்சியம்மையை தரிசிக்கும் வழக்கம் கொண்ட அவர் அன் றைய தினம் தரிசிக்க முடியா மையை எண்ணி வருந்தி தனது கையைத் தலையணையாகக் கொண்டு படுத்துக் கொண்டிருந் தார். இச்சூழ்நிலையில் ஒரு சிறு பெண்குழந்தை பாவாடை கட்டிக் கொண்டு தங்கத் தாம்பாளத்தில்

பிரசாதத்தைக் கொடுத்தது. இவர் நிமிர்ந்து பார்த்தபோது அப்பெண் குழந்தையைக் காண வில்லை. ஆச்சரியமடைந்த நாகப்பசெட்டியார் அவர்கள் பிர சாதத்தை வண்டிக்காரனுக்கும் தந்து, தானும் உண்டார். மறு நாள் மாட்டுவண்டி மூலம் மதுரை வந்து, அன்னை மீனுட்சி திருக் கோவிலை அடைந்தார். கோவி லில் அர்ச்சகர்கள் தங்கத் தாம் பாளத்தைக் காணவில்லை என்று பரபரப்புடன் அங்குமிங்குமாகத் தேடிக் கொண்டிருந்தார்கள். நாகப்ப செட்டியார் அவர்கள் ஆலய நிர்வாகத்தினரிடம் தனது கனவில் நடந்த அபூர்வ நிகழ்ச் சியை விளக்கித் தங்கத் தாம் பாளத்தை அவர்களிடம் ஒப் படைத்தார். பின் 'அன்னை, மீனுட்சியம்மையை நாடித்தான் பக்தன் வரவேண்டுமே தவிர, பக்தனைத்தேடி அன்னைமீனுட்சி யம்மை வரக்கூடாது' என எண்ணி இனி எக்காரணத்தைக் கொண்டும், வைகைக் கரையைத் தாண்டுவதில்லை எனச் சபத மிட்டு ஆலயத்தின் அருகிலுள்ள வடக்குச் சித்திரை வீதியில் வீடு வாங்கிக் கொண்டு அங்கேயே தங்கிக் காலையும், மாலையும் அன்னையைத் தரிசித்து வந்தார். சோதனையாகச் சில மாதங்களில் அவரது துணைவியார் அமராவதி புதூரில் இறந்த செய்தி அவருக்கு வந்தது. தான் செய்த சபதத் தின்படி மதுரையை விட்டுச் செல்லாது, அடக்கம் செய்து விடும்படி இங்கிருந்தபடியே செய் தியைக் கொடுத்துவிட்டு என்றும் போல் அன்னையைத் தரிசித்து விட்டு தன் வாழ்நாள் முழுமை யும் மீனுட்சி பட்டணத்திலேயே இருந்து தனது அந்திம காலத் தில் மதுரையிலேயே மீனுட்சி திருவடியை அடைந்த மாமனிதர் நாகப்ப செட்டியார். கடந்த 7 ஆண்டுகட்கு முன்பாக அவரது வாரிசாகத் திகழ்ந்து வந்த அம ராவதிபுதூர் திரு. கருப்பஞ் செட்டியார் அவர்கள்நோய்வாய்ப் பட்டு மதுரையில் ஒரு தனியார் மருத்துவமனையில் இறந்து விட் டார்கள். அவரது பூத உடல் ஜடாமுனி கோவில் தெருவிலுள்ள வீட்டில் வைக்கப்பட்டிருந்தது. அன்றைய தினம் வண்டியூர் அருள்மிகு மாரியம்மன் திருக் கோவிலில் நடைபெற்ற ஓர் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்க வந்திருந்த அமைச்சர் ஆர் எம். வீ. அவர்களிடம் வயிநாகரம் திரு. கருப்பஞ் செட்டியார் அவர் களின் மரணச் செய்தியை தெரி வித்தேன். உடனே அமைச்சர் ஆர் எம். வீ. அவர்கள் நிகழ்ச் சியை ரத்துச் செய்துவிட்டு அரசு சார்பிலும், தனது சார்பிலும் வயிநாகரம் கருப்பஞ் செட்டியார் அவர்களின் பூத உடலுக்கு மலர் மாலையணிவித்து அஞ்சலி செலுத்தினார். வயிநாகரம் குடும் பத்தினர் ஆலயத்திற்குச் செய்த திருப்பணியின் பலனாக அவ்வாரி சில் வந்த கருப்பஞ் செட்டியா ருக்கு அரசு மரியாதை 150 ஆண்டுகட்குப் பின்னும் கிடைத் தது என்றால் அது அன்னை மீனுட்சியம்மைக்குச் செய்த தொண்டின் காரணமாகத்தான். இப்படிப்பட்ட ''தெய்வத்தோடு பேசிய மாமனிதர்கள்'' செய்த தர்மத்தின் அடிப்படையில் ஆல யப்பணியில் நகரத்தார்களுக்குப்

நகரத்தார் சுயநிதிப் பல்கலைக் கழகம் அமைப்போம் வாரீர்!

வரதட்சணை எனும் வேண்டாத பழக்கம் இனி வேண்டாம், நம் சமூகத்தில்!

பிரதிநிதித்துவம் அளிக்கவேண்டுமென்று அன்றைய அறநிலைய அமைச்சர் ஆர் எம். வீ. யும், அன்றையத் தமிழக முதல்வர் புரட்சித்தலைவர் எம். ஜி ஆர். அவர்களும் விரும்பிய காரணத்தினால்தான் அவர்களுக்கு அறிமுகமானவன் என்ற நிலையில், அடியேனுக்கு அறங்காவலர் குழுத் தலைமைப் பதவியை அளித்தனர் என்பதை நான் என்றும் மறந்ததில்லை. பாட்டன் சொத்து பேரனுக்கு வருவதுபோல, அமராவதி புதூர் நாகப்ப செட்டியாரின் தர்மம் அவர் மரபில் நகரத்தார் இனத்தில் தோன்றிய நம் அனைவரையும் காப்பாற்றுகிறது என்பதில் ஐயமில்லை. தங்கத்தேரில் மீனாட்சியம்மையை வைத்துப் பக்தியோடு இழுத்துவந்த போது அதை நான் இழுப்பதாக நினைக்கவில்லை. அமராவதிபுதூர் நாயினாகரம் நாகப்ப செட்டியாரும் வெங்கடாசலம் செட்டியாரும் இழுப்பதாகவே எனக்குத் தோன்றியது. அந்த நினைப்பிலேயே மீனாட்சிக்கு அன்றும் பணி செய்தேன். இன்றும் பணி செய்கிறேன். இனி என்றும் பதவியில்லாமலும் தொண்டு செய்யத் தயாராக இருக்கிறேன்.

(வளரும்)



பனையப்பட்டி சுப. அ. சொ. பழநியப்ப செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் அண்ணாமலை B. A. க்கும் நச்சாந்துபட்டி வீர. மு. சுப முத்தையா செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி மீனாட்சி என்ற சரோஜா B. com க்கும் நச்சாந்துபட்டியில் 20-4-92 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.



சிவகாமி ஆச்சிக்கு அஞ்சலி

பொன்கொழிக்கும் மேனியெழில் போன தெங்கே?
　　பூமணக்கும் பொட்டுமுகம் காண்ப தெந்நாள்?
கண்கொழிக்கும் இருவிழியின் கருணை எங்கே?
　　கட்டுகிற பட்டுகளின் கவர்ச்சி எங்கே?
மண்களிக்கும் மக்களுக்கு மாதா எங்கே?
　　மனைநிறைந்த பேரருக்குப் பாட்டி எங்கே?
கண்களிக்கும் ஆனாவின் கண்கள் எங்கே?
　　கனிந்தமுகப் புன்சிரிப்பும் எங்கே எங்கே?

அனைவருக்கும் மங்கலமாய் வாழ்ந்த ஆச்சி
　　ஆண்டவனார் திருவடியில் பூவாய்ச் சேர்ந்தார்
மனையிருக்கும் நடுவீட்டில் விளக்காய் உள்ளார்;
　　மடலுக்குள் திருநீறாம்; பொட்டும் ஆனார்
நினைவுக்குத் தேனானார் ஆனா வீட்டில்
　　நிகழ்ச்சிகளில் துணையாக முன்னால் நிற்பார்
புனைகின்ற கவிதைக்குப் பொருளாய் ஆன
　　பூமுகத்துத் தேவிபுகழ் அஞ்ச லிப்போம்.

ஆச்சியவர் பெயராலே கல்லூரிக்குள்
　　அழகான மண்டபத்தைக் கட்டி வைப்போம்
பாச்சொரியும் புலவருக்குத் தமிழ கத்துப்
　　பரப்பளவில் பெரியதொரு போட்டி வைப்போம்
பேச்சுக்கும் எழுத்துக்கும் படைப்பினுக்கும்
　　பேரளவில் போட்டிவைத்துப் பரிசளிப்போம்
ஆச்சியவர் திருநினைவை இவ்வா றாக
　　ஆசிரியவர் மாணவர்கள் அஞ்ச லிப்போம்.

— முனைவர் அர. சிங்காரவடிவேலன்
தமிழ்த் துறைத் தலைவர்
ஸ்ரீ சேவுகன் அண்ணாமலைக் கல்லூரி தேவகோட்டை

தேவகோட்டையில் சேக்கிழார் விழா

சேக்கிழார் விழாவும் நகரத்தார் இளைஞர் முன்னேற்றச் சங்கத்தின் ஆண்டு விழாவும் 5-6-92 அன்று தேவகோட்டை சிவன் கோவில் வளாகத்தில் சேக்கிழார் விழாக் குழுத் தலைவர் உ. மு. சுப. லெ. அழ. அழகப்பச் செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

'மீனாட்சி திருமைந்தன்' வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் விழாவினைத் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றி போட்டிகளில் வென்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்கள். 'சைவ நெறியில் பெண் அடியார்கள்' என்ற தலைப்பில் பேராசிரியர் திரு. கு. ஞானசம்பந்தன் ஆற்றிய தனிச் சொற்பொழிவைத் தொடர்ந்து, நகைச்சுவையரசு பேராசிரியர் திரு. கண. சிற்சபேசன் நடுவர் பொறுப்பேற்க ''பெரிய புராணம் மரபுக் காவியமா? புரட்சிக் காவியமா?'' என்ற தலைப்பில் பட்டிமன்றம் நிகழ்ந்தது. 'மரபுக் காவியமே' என பொற்கிழிக் கவிஞர் திரு. சொ. சொ. மீ. சுந்தரம், டாக்டர் திரு. மோகன் மற்றும் செல்வி சாந்தி முத்துவும் வாதிட்டனர். 'புரட்சிக் காவியமே' என திரு. சுபாஷ்சந்திரபோஸ், பேராசிரியை நிர்மலா மோகன், மற்றும் பேராசிரியர் திரு. ஞானசம்பந்தமும் வாதிட்டனர். நடுவர் ''பெரியபுராணம் மரபுக் காவியமே'' எனத் தீர்ப்புரைத்தார்.

அன்னையின் ஆசி பெறுவோம்



முத்தமிழ்மணி கதி. சுந்தரம்

உள்ளம் உயர்ந்த வள்ளியம்மையாம்
தெய்வத் தாயின் சீர்மிகு பண்பினை
மணம்கொள எழுதிய மைந்தர் வாழ்க !
அன்னை மீனாட்சி அருள்திரு மைந்தர்
சிதம்பரம் எழுதிய செந்தமிழ்க் கட்டுரை
'அன்னையின் அறவுரை' அருமைக் கட்டுரை
இறப்பிலும் அறவுரை எடுத்துச் சொன்ன
தாயின் பெருமையைச் சாற்றி நிற்கும்;
உற்றார் உறவினர் கற்றார் மற்றோர்
ஏழை எளியவர் எல்லோரிடத்தும்
பிரியம் கொண்ட பெருமைத் தாயை
பெரிய குடும்பமோ சிறிய குடும்பமோ
அன்புரை கூறி அவர்குறை தீர்த்து
அமைதி ஆக அனைவரும் வாழ
வழி வகை செய்த வள்ளியம்மையாம்
நற்சுடர் வளர்த்த ஞானத் தாயை
இதயம் நிறுத்திய ஏந்தல் வாழ்க !
சான்றோர் சிதம்பரம் தழைத்து வாழ்க !
அவனி போற்றும் அருமை அன்னையைப்
போலொரு தெய்வம் புவியில் உண்டோ
எனக்கவி முழக்கிய இனிய பாவலர்
எண்ணம் உயர்ந்த கண்ண தாசனின்
கருத்தை எழுதிய கண்ண தாசனின்
கவின்புகழ்க் காவலர் நயம்மிகு நாவலர்
செந்தமிழ் முழக்கும் சிதம்பரம் வாழ்க !
சிதம்பரம் மொழிகள் சிந்தையுள் ஏற்போம்
வையகம் போற்ற வாழ்வில் உயர்வோம்.

தமிழருவி மணியனின் ஒலிப் பேழை வெளியீட்டு விழாவில்...

கண்ணதாசன் கவிஞனாகவே பிறந்தவர்; அவர் முயன்று கவிஞனாக வில்லை. அவர் வெகு வேகமாகக் கவிதை படைக்கும் ஆற்றல் பெற்றவர்.

அவர் திருப்புத்தூர் தொகுதி வேட்பாளராக நின்றபோது என்னைச் சந்தித்து வாக்குகள் கேட்டார். தேர்தல் களத்தில் கூட அவர் நல்ல மனோ நிலையில் இருந்தார்.

கண்ணதாசன் வாழ்க்கையில் ஒளிவும் இல்லை; மறைவும் இல்லை. நாட்டு நடப்பை அருமையாக வடிப்பார். காமராஜர், நேரு போன்ற வர்களுக்கு அவர் பாடியுள்ள இரங்கற் பாக்கள் பெரிய சொத்து. கண்ணதாசனைப் போல சம்பாதித்தவனும் கிடையாது; செலவழித்த வனும் கிடையாது.

கண்ணதாசனை நாம் பார்த்தோம்; அவரோடு பேசினோம் என்பதே நமக்குப் பெருமை.

— குன்றக்குடி அடிகளார்

மதுரை என்றாலே அன்றும் சொக்கர்தான்; இன்றும் சொக்கர் தான்.

குற்றுலம் அருவிகளில் ஓராண்டில் நான்கு மாதங்கள்தான் அருவி கொட்டும். ஆனால் தமிழருவி மணியன் அவர்கள் வாயைத் திறந்தால் 365 நாட்களும் தமிழருவி கொட்டிக் கொண்டே இருக்கும்.

கவியரசர் கண்ணதாசன் பிறவிக் கவிஞர். அவர் ஒரு குழந்தை. அவரைப் பற்றி எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் பேசலாம். அவரிடம் உதவி பெற்றவர்கள் பலர். அப்படி உதவி பெற்றவர்கள் அவரை நினைத்துப் பார்ப்பது கூடக் கிடையாது.

— வி. என். சிதம்பரம் செட்டியார்

கண்ணதாசன் மாபெரும் கவிஞன் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. வாழ்கிற கவிஞனுக்கு நாட்டில் மரியாதை கிடையாது. வாழ்க்கையின் அகல நீளங்களை அளந்த கவிஞன் கண்ணதாசன். தன்னுணர்ச்சிப் பாடல்களை உயர்த்தியவர் அவர் என்றால் மிகையாகாது. 'தங்கத்திலே ஒரு குறையிருந்தாலும்' என்ற அவரது பாடல் தன்னுணர்ச்சிப் பாடல்களிலே தலை சிறந்தது. கண்ணதாசனின் பாடல்கள் என்றும் ஜீவனுள்ளவை.

— இளம்பிறை மணிமாறன்

கவிஞர் கண்ணதாசன் வாழ்ந்த காலத்தில் நாமும் வாழ்ந்தோம் என்பது நமக்குப் பெருமை. 'மழை கூட ஒரு நாளில் தேனாகலாம்' என்ற பாடலை அவர் முடித்திருக்கும் விதம் அற்புதம்!

— செல்வி லீலா

(மதுரை வானொலி நிலைய இயக்குநர்)

கண்ணதாசன் பாடல் இயற்ற வந்தபோது எந்தப் போராட்டமும் வரவில்லை. காதலை நாகரிகமாகச் சொல்பவர் கண்ணதாசன். தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம் என்பார் கவிஞர். மலையாளப் பாடலாசிரியர் வயலார் ''மொழி பெயர்ப்பில் கண்ணதாசன் என்னை மிஞ்சி விட்டார்'' எனப் பாராட்டியிருக்கிறார்.

— பேராசிரியர் த. ராஜாராம்

கண்ணதாசன் எழுதிய முதல் பாட்டு 'கலங்காதிரு மனமே' என்பதாகும். அவர் எழுதிய கடைசிப் பாட்டு 'கண்ணே கலைமானே' என்பதாகும். கண்ணதாசன் வாழ்ந்து காட்டியவர். கண்ணதாசனைப் போல் கடவுளை வம்புக்கிழுத்தவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். கண்ணதாசனுக்கு அவதார ரகசியம் உண்டு. இன்று அவர் இருப்பாரேயானால் அறம்பாடியே அரசியல்வாதிகளை ஒரு வழி பண்ணியிருப்பார். தங்கச் சுரங்கம் அவர்.

— முனைவர் இரா. மோகன்

பதினைந்து ஆண்டுகளாகத் தேடிக் கொண்டிருந்த தமிழருவி மணியனை இன்று பார்ப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். வி. என். சிடி. அவர்களின் கனவு நனவாகிக் கொண்டிருக்கிறது. உயர்ந்த கவிதை விமர்சனங்கள் நாடு முழுவதும் பரவப் போகின்றன.

பாரதி, பாரதிதாசன், பட்டுக்கோட்டை போன்றவர்கள் தங்களுக்கென ஒருவட்டத்தைப் போட்டுக்கொண்டார்கள். ஆனால் கண்ணதாசன் அனைத்தையும் பாடினார்.

திரைப் படப் பாடல்களுக்குள் இலக்கிய நயத்தைக் கொண்டு வந்தவர் கவிஞர். தன் குறைபாடுகளை ஒப்புக் கொண்ட ஒரே ஞானி கண்ணதாசன்.


மனிதன் எப்படி வாழ வேண்டும் என்பதற்குக் காந்தியடிகளின் ''சத்திய சோதனை'' ஒரு உதாரணம். மனிதன் எப்படி வாழக் கூடாது என்பதற்கு கவிஞரின் ''வனவாசம்'' ஒரு உதாரணம்.

அரசியல் பற்றி அவர் பேசும்போது ''நான் இருந்த இடத்தில் தான் இருக்கிறேன். கட்சிகள்தான் என்னைவிட்டுப் போகின்றன'' என வேடிக்கையாகக் கூறுவார்.

— மகள் கவிஞர் அரு. நாகப்பன்

ஆறு மாதங்களுக்கு முன்பு பம்பாய் தமிழ்ச் சங்கத்தில் பேசினேன். அதன் பின் இரண்டாவது முறையாக இங்கு மகிழ்ச்சியை அனுபவிக்கிறேன்.

தமிழ் மாமுனிவர் வாழ்த்தி விட்டதால் தமிழ் நாடே வாழ்த்துவதாகக் கருதுகிறேன்.



கீழச்சிவல்பட்டி திரு. சுப. லெட்சுமணன் புதல்வன் செல்வன் லெட்சுமணன் என்ற கணேசன் M. Sc. (M. Tech) க்கும் கடியாபட்டி விஸ்வநாதபுரம் திரு. பி. சு வ. பழ. வெ. சுப்பிரமணியன் செட்டியார் புதல்வி செல்வி வெள்ளச்சி என்ற சாந்தி (B. Sc.) க்கும் 21-5-92 அன்று கடியாபட்டி விஸ்வநாதபுரத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

ஒழுக்கமும் நேர்மையும் என் இரு கண்கள் ஆகும். அரசியலை வேள்வியாக நடத்த முயன்று தோல்வி கண்டவன் நான்.

கவிஞனின் காலக் கடமை, மக்களை வழிப்படுத்துவது. பாரதி ஒருவன் தான் என் இலட்சியக் கவிஞன். கண்ணதாசனின் பல வீனங்களை நான் நியாயப்படுத்தவில்லை. கண்ணதாசன் அடி வாரத்திலிருந்து இமயம் சென்றவன்.

மனித வாழ்க்கைக்கு ஒரு இலட்சியம் வேண்டும். பழியும் புகழும் முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பவை. வெற்றியின் உயிர்த்தளம் அனுபவம் தான்.

காமராஜரைப் பாடியதால் எனக்குக் கண்ணதாசன் மீது பாசம் ஏற்பட்டது. அதில் முகிழ்த்த காதல்தான் ஒலிப் பேழை தயாரிக் கத் தூண்டியது.

— தமிழருவி மணியன்

(மதுரையில் 20-6-92 அன்று நடைபெற்ற திரு. தமிழருவி மணியனின் ''கண்ணதாசன் கவிதைகள் ஒரு கண்ணோட்டம்'' என்ற ஒலிப் பேழை வெளியீட்டு விழாவில் பேசியவை)

''எங்கே அய்யா படப்பெட்டி?''

கிராமம் ஒன்றில் நடைபெற விருந்த இலக்கியக் கூட்டத் தில் கலந்து கொண்டு பேச, சொற்பொழிவாளர்கள் அனைவரும் ஒரு காரில் சென்று கொண்டிருந்தனர். பிரதான சாலையிலிருந்து கார், மண்பாதைக்குத் திரும்பியது. அங்கிருந்து அக் கிராமம் மூன்று கிலோ மீட்டர் தொலைவில் இருந்தது. அப்போது மக்கள் திமு திமு வென காரைப் பார்த்தபடி ''வந்தாச்சு, வந்தாச்சு'' என ஆவலுடன் ஓடிவந்தனர். இலக்கிய ஆர்வத் தால் மூன்று கிலோமீட்டர் தொலைவு ஓடிவந்த மக்களைப் பார்த்து சொற்பொழிவாளர்கள் வியந்தபோது ஒரு நபர் காருக்குள் தலையை விட்டு ''எங்கே அய்யா படப் பெட்டி?'' எனக் கேட்டதும்தான் அந்த ஊர் திரையரங்கத்திற்கு வர வேண்டிய படப்பெட்டியை எதிர்பார்த்து வந்த கூட்டம் அது என்பது தெரிய வந்ததாம்!

— முனைவர் கு. ஞானசம்பந்தம்

(தேவகோட்டையில் நடைபெற்ற சேக்கிழார் விழாவில்)

தகவல் : வி ஆர். சின்ன அருணாசலம்



செய்திகள் வாசிப்பவர்...

எல். சுந்தரம்

ஃ மதுரை ஆடிவீதியில் உள்ள திருப்புகழ் சபையில் பேராசிரியர் சொ. சொ. மீ. சுந்தரம் அவர்கள் 24-4-92 முதல் வாரம் ஒரு நாள் கந்த புராணம் பற்றி தொடர் சொற்பொழிவு நிகழ்த்தி வருகிருர்கள். 2-7-92, 9-7-92 13-7-92, 18-7-92 & 23-7-92 ஆகிய தினங்களில் இரவு 7-00 மணிக்கு கந்த புராணத்தின் இறுதிப் பகுதிகளை அவர்கள் விளக்க இருக்கிருர்கள்.

ஃ அண்ணமலைப் பல்கலைக் கழகத்தின் துணைப் பேராசிரியரும் பதிப்புச் செம்மலுமான முனைவர் திரு. ச. மெய்யப்பனரின் 59 ஆம் ஆண்டு நிறைவு விழா திருக்கடையூரில் 28-6-92 அன்று சிறப்பாக நடைபெற்றது.

ஃ 5-7-92, 2-8-92, 6-9-92 ஆகிய தேதிகளில் மதுரை வானெலியில் 'ஞானச் சுடர்' பகுதியில் மாலை 6-10 மணிக்குப் பேராசிரியர் கதி. சுந்தரம் அவர்கள் 'மீனட்சி அம்மையின் பிள்ளைத் தமிழ்' என்ற தலைப்பில் உரையாற்ற விருக்கிருர்கள்.

ஃ மதுரை வானெலியில் 6-7-92 16-7-92, 26-7-92 ஆகிய மூன்று தினங்களும் காலை 6 மணிக்கு பேராசிரியர் சொ. சொ. மீ. சுந்தரம் அவர்கள் ''அருணகிரி நாதரின் சிந்தனைகள்'' என்ற தலைப்பில் உரையாற்ற விருக்கிருர்கள்.

ஃ காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தின் தொலை தூரக் கல்வி இயக்குனர் பொறுப்பில் முனைவர் திரு. வை. சு. அழகப்பன் நியமிக்கப் பெற்றுச் செயலாற்றி வருகிருர்.

ஃ பாகனேரி திரு. இராம. அண்ணமலை செட்டியாரின் புதல்விகள் ஏஎன். லதாராணி, ஏஎன். ஜான்சிராணி இருவரும் மதுரை வானெலியில் 16-7-92 வியாழன் இரவு 8 மணிக்கு சொல்லாடல் மன்றம் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றவிருக்கிருர்கள்.

ஃ விரையாச்சிலை நகரத்தார் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோவில் திருக்குட நன்னீராட்டு விழா 30-8-92 (ஆவணிமீ 14உ) ஞாயிறன்று காலை 6 மணி முதல் 7 மணிக்குள் நிகழ விருக்கிறது.

ஃ வேந்தன்பட்டியைச் சேர்ந்த திரு. இரயில் மெ. மு. பழநியப்பனர் செய்த மனுக்குலத் தொண்டுகளைப் பாராட்டி அன்னருக்கு வேந்தன்பட்டி இயற்கை நல்வாழ்வுக் கழகம் 'ஜீவபந்து' என்ற விருது அளித்துக் கௌர

''நாலாயிரத் திவ்யப் பிரபந்தம்'' பற்றிக் குறிப்பு வரைக ... எனத் தேர்வில் ஒரு கேள்வி கேட்கப்பட்டது. அதுபற்றி ஒன்றும் தெரியாத மாணவன் —

''இதில் நாலாயிரம் பாடல்கள் இருக்கும். இது பிரபந்தங்கள் வகையைச் சார்ந்தது. இது மிகவும் திவ்யமாய் இருக்கும்'' எனப் பதில் எழுதியிருந்தான்.

— முனைவர் கு. ஞானசம்பந்தம்

(தேவகோட்டையில் 5-6-92 அன்று நடைபெற்ற சேக்கிழார் விழாவில்)

வித்துள்ளது.

ஃ மதுரை மெல்லோட்ட மையத்தின் 9 ஆவது ஆண்டு விழா 31-5-92 ஞாயிறன்று நடைபெற்றது.

ஃ மதுரை நகர விடுதியின் புதிய கட்டிடத் திறப்பு விழாவை யொட்டி மதுரை நகரத்தார் சங்கம் சிறப்பு மலர் ஒன்றை வெளியிட ஆவன செய்து வருகிறது.

ஃ தஞ்சாவூர், கீழவாசல் பாம்பாட்டி தெருவில் அமைந்துள்ள ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் கோவிலின் திருக்குட நன்னீராட்டு விழா 10-6-92 அன்று சிறப்பாக நடைபெற்றது.

திருமணம்

தேவகோட்டை திரு. செ. ராம. நா. மு. நா. செல்லப்ப செட்டியார் புதல்வன் செல்வன் செந்தில் நாராயணன் B. Sc., C. G. T. க்கும் மேற்படியூர் திரு. பெரி சொக்கலிங்கம் செட்டியார் புதல்வி செல்வி மீனு B. Sc. க்கும் 21–5-92 அன்று தேவகோட்டையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.


முனைவர் அர. சிங்காரவடிவேலன் அவர்கள் தலைமையில் கவிஞர்கள் முனைவர் வ. தேனப்பன் சிவல்புரி சிங்காரம், சேது அருணாசலம், ந. கோவிந்தன், உ. மதட்சிணாமூர்த்தி ந. சீனிவாசன் ஆகியோர் வாழ்த்துக் கவி பாடினர்.

அரிமழத்தில் இலவச மருத்துவ முகாம்

அரிமழம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் தே. முரு. உமையாள் ஆச்சி நினைவு, நான்காவது இலவச மருத்துவ முகாம் 31–5–92 அன்று நடைபெற்றது.

கண், பல், காது, மூக்கு, தொண்டை, தோல், பால்வினை நோய், இருதய நோய், குழந்தைகள் நலம், பொது மருத்துவம் முதலிய துறைகளைச் சேர்ந்த சிறப்பு மருத்துவர்கள் சிகிச்சை அளித்தார்கள். 160 நோயாளிகள் சிகிச்சை பெற்றார்கள்.

சிறு நீர், இரத்தம் சோதிக்கப்பட்டு மருந்து இலவசமாக வழங்கப் பெற்றது. முகாமில் ஊசி மூலம் மருந்தும் செலுத்தப் பெற்றது.



எஸ். சொக்கநாதபுரம் திரு. கண. மு. ராம. முத்தையா செட்டியாரின் புதல்வன் செல்வன் மணி B. B. A., M. Com. க்கும் ஒ. புதூர் திரு. பெ. அ. சுப்பிரமணியன் செட்டியார் புதல்வி செல்வி முருகவல்லி என்ற புனிதாவிற்கும் 15-5-92 அன்று குமாரவேலூரில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

மன்னர் அளித்த பரிசு !

ஒரு நாட்டு அமைச்சர் அந்நாட்டு மன்னரிடம் ''நம் நாட்டு மக்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். அவர்களுக்கென ஒரு நாதசுரக் கச்சேரிக்கு ஏற்பாடு செய்தால் அவர்கள் இன்னும் மகிழ்ச்சியாக இருப்பார்கள்'' எனச் சொல்ல, அதன்படி பிரபல நாதசுர வித்வான் குழுவினரின் கச்சேரி அமோகமாக நடைபெற்றது. கச்சேரி முடிந்ததும் மன்னர் அக்கச்சேரியில் ஒத்தூதியவருக்குப் பரிசளித்தார். ''என்ன அரசே இப்படிச் செய்து விட்டீர்கள்?'' என அமைச்சர் கேட்க, ''நாதஸ்வர வித்வான் விட்டு விட்டு வாசித்தார். அவர்தான் தொடக்கத்திலிருந்து விடாமல் வாசித்துக் கொண்டிருக்கிறார். நான் பரிசளித்தது சரிதான்'' என்றார் மன்னர்.

மன்னரின் அறிவுக் கெட்டியது அவ்வளவுதான். அது போலத்தான் என் இலக்கியப் பேச்சும்.

— ஆறுமுகசாமி

(மதுரையில் 20,6-92 அன்று நடைபெற்ற திரு. தமிழருவி மணியனின் ''கண்ணதாசன் கவிதைகள் ஒரு கண்ணோட்டம்'' ஒலிப் பேழை வெளியீட்டு விழாவில்).

நகரத்தார் சுய நிதிப் பல்கலைக் கழகம்

— முனைவர் கே. நாகப்பன்

(துணை வேந்தர், அழகப்பா பல்கலைக் கழகம், காரைக்குடி)

பல்லாண்டுகளாகக் கல்வித் துறையில் பணியாற்றி வரும் நான், 'நகரத்தார்களாகிய நாம் கல்வித் துறையில் இனிமேல் என்ன செய்ய வேண்டும்' என்று தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தேன். என் சிந்தனையை எழுத்தாக்க கண்டனூர் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா மலர் அருமையான வாய்ப்பை அளித்திருக்கிறது. என்னுடைய இந்த எழுத்து நகரத்தார் பெருமக்களின் எண்ணத்தில் ஊடுருவுமானால் எதிர்காலக் கல்வி வளர்ச்சிக்கு அடிகோலும். என் சிந்தனை ''நகரத்தார் தற்சார்புப் பல்கலைக் கழகம்' (Nagarathar Self Supporting University) என்னும் நிறுவனமாக இந்த நூற்றாண்டின் நிறைவுக்குள் உருவாகும். இருபத்தோராம் நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளில் நம் மாணவர்கள், நம் பல்கலைக் கழகத்தில் பல்வேறு துறைகளில் உயர்நிலைப் படிப்பைத் தங்குதடையின்றி மேற்கொள்ளுவார்கள்.

உயர்நிலைக் கல்வியை நாடவேண்டிய அவசியம்

நம் முன்னோருக்குத் திரைகடல் ஓடித் திரவியம் தேடத் திண்ணைப் பள்ளிகூடத்து எண் சுவடிக் கணக்கறிவும் நீதி நூல்களோடு நிறைவெய்திய தமிழறிவும் போதுமானவையாக இருந்தன. அயல் நாட்டு வாழ்க்கை, அவர்களுக்குப் பிற மொழிகளில் நடைமுறை அறிவையும், பிற துறைகளில் அனுபவ அறிவை



முனைவர் கே. நாகப்பன்

யும் அளித்தது. அரசியல், பொருளாதாரச் சூழ்நிலைகளால் தாய் நாடு திரும்பவும், உள்நாட்டில் கல்வி அறிவைப் பெருக்கிக் கொள்ளவும், வேலைகளை நாடவும் வேண்டிய சூழ்நிலை உருவாயிற்று.

எதிலும் முன்னோடியாய்


விளங்கும் நம்மவர் தொடக்கப் பள்ளிகளையும் உயர் நிலைப் பள்ளிகளையும் தாம் வாழும் ஊர்களில் முதலிலும், தொழில் செய்யும் ஊர்களில் அடுத்தும் நிறுவிக் கல்வி அறப்பணிக்குக் கால்கோள் நாட்டினர். நகரத்தார்களின் கல்விப்பணி, மேல் நிலைப் பள்ளிகளாகவும், கல்லூரிகளாகவும், பல்கலைக் கழகங்களாகவும் விரிந்தன. நம் நிறுவனங்கள் விரிந்தும், நம் இளைஞர்கட்கு உயர் நிலைக் கல்வி வாய்ப்பில் கைவிரிக்க வேண்டிய சூழ்நிலை வந்துவிட்டது.

நாட்டுச் சூழலில் ஏற்பட்ட மாற்றங்கள், முன்னேறிய இனத்தாராக விளங்குகிற நம்மை, உயர்நிலைக் கல்வி நிலைக்கு வரும்போது முன்னேற விடாமல் தடுத்தன. 'இனவழி ஒதுக்கீட்டு முறை' நமக்கு இடைஞ்சலாய் - உயர்நிலைக் கல்வியின் முகம் காண முடியாமல் மறைக்கும் நந்தியாய் - குறுக்கே நிற்கிறது. நம் இளைஞர்கள் ஆர்வத்தில் குறைந்தவர்கள் அல்லர்; அறிவிலும் தரம் தாழ்ந்தவர்களல்லர். கண் விழித்துப் படிக்கவும் கடினமாய் உழைக்கவும் நம்மினத்தின் இளைய இருபாலாரும் ஆர்வமாய் இருக்கிறார்கள். உயரின ஒதுக்கீடு, குறைவாய் இருப்பதால், போட்டி வலுத்து முதலாம் இரண்டாம் இடங்கள் நூலிழையில் தப்பிப் போகின்றன. தகுதியிருந்தும் தடுத்து நிறுத்தப்படும் நிலை இருக்கிறது.

'உயர்வுக்கு உயர்கல்வி வேண்டும்' என்ற நிலை ஒரு புறமிருக்க, உயிர் வாழ்வதற்கே - தலை குனியாமல், கை நீட்டாமல் - மானத்தோடு வாழ்வதற்கே உயர்கல்வி தேவை என்ற சூழ்நிலை, இன்றைய சூழ்நிலையாகும் ''பர்மாவில் போனது வருமா? மலேயா என்றும் நிலையா?'' என்ற நிலை, ஆடம்பரமான திருமணங்கள், கொள்வினை - கொடுப்புவினைகளில் இனத்தாரிடையே நிலவும் பொருளாதார ஒழுங்கீனங்கள், தன் நிலையைப் பாராமல் தன்னைவிட உயர்ந்தாரோடு ஒப்பிட்டுப் பார்த்து, ஆகாச் செலவுகளில் பொருளை விரையமாக்கல் போன்ற பொருளாதாரச் சிக்கல்கள் வேலை கொடுத்தவர்களை வேலை தேடச் செய்திருக்கின்றன. வேலைக்கு வேண்டிய தகுதிகளைப் பெற்றுக் கொள்ள உயர்கல்வி ஓர் இன்றியமையாத தேவையாகிவிட்டது. கல்வியில் தொடங்கிய தடை, கடைசி வரையிலும் தொடர்கிறது.

வேலை வாய்ப்புகளினால் மட்டும் நம் இனம் முன்றி விடாது. தொழில் முயற்சியும் ஆக்கத்துறையில் ஈடுபடுவதுந்தாம் பொருளாதார வளத்தைப் பெருக்கி, நம் இனத்தை முன்னேறச் செய்து முன்போல் முதன்மையான இனமாகச் செய்யும்.

இனத்தின் பெயரால் உயர் கல்வி வாய்ப்புக்குப் போடப்படும் தடையை எவ்வாறு தாண்டுவது? வேலை தேடுவாராக அலையாமல் வேலை வழங்குபவராக எவ்



சிறந்த தலைவருக்கான விருதை காரைக்குடி சுழற்குழுத் தலைவர் திரு. முத்துபழநியப்பனுக்கு சுழற்குழு மாவட்ட ஆளுநர் திரு ஏ. வி. ஆர்எம். வி. சங்கரநாராயணன் வழங்கும் காட்சி.

காரைக்குடி சுழற் குழுவிற்கு 21 விருதுகள்!

சிவகாசியில் 31-5-92 அன்று நடைபெற்ற சுழற்குழு மாவட்ட மாநாட்டில் அந்த மாவட்டத்தில் உள்ள 80 சுழற் குழுக்களில் சிறந்த குழுவிற்கான விருதையும் மேலும் பல சிறப்பான சேவைகளுக்காகவும் மொத்தம் 21 விருதுகளை காரைக்குடி சுழற்குழு பெற்றது. இந்த விருதுகளை சுழற்குழு மாவட்ட ஆளுநர் திரு. ஏ. வி. ஆர்எம். வி. சங்கரநாராயணன் வழங்கினர்.

சிறந்த தலைவருக்கான விருது காரைக்குடி சுழற் குழுத் தலைவர் திரு. முத்து பழநியப்பனுக்கும் சிறந்த செயலாளருக்கான விருது திரு. வயி. கருப்பன் செட்டிக்கும் இம் மாநாட்டில் வழங்கப்பெற்றன. சுழற்குழு வரலாற்றிலேயே ஒரு குழு இவ்வளவு அதிகமான விருதுகளைப் பெற்றது இதுவே முதன் முறையாகும்.

வாறு மாறுவது? ஏனைய துறைகளில் ஏறு போல பீடு நடைபோடும் நம் இனத்தை உயர்கல்வித் துறையிலும் உயர்த்துவது எவ்வாறு?

சிலர் கருத்துவதுபோல நம்மினத்தைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்துவிட முயலலாமா? பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கப் படுவதால், நம் உயர்கல்விச் சிக்கல் தீராது. பிற்பட்டோர் பட்டியலின் எண்ணிக்கை வேண்டுமானால் நீளலாம். அவ்வளவுதான். அந்த வாய்ப்புக் கிடைக்கக்கூடிய சூழ்நிலையோ, அதனைப் பெற அரசை வற்புறுத்தவோ,

நெருக்கடிக்கு உள்ளாக்கவோ தேவையான ஆள்பலம் நம்மிடம் இல்லை. ஆனால், ஒன்று மட்டும் உண்மை. நாம் பின் தங்கிய இனத்தார் அல்லர். நம் இனம் ஒரு சிறுபான்மைச் சமூகம். (Minority Community) முன்பு முன்னேறிய – இன்று முன்னேற என்ன வழி என்று திகைத்து நிற்கிற ஒரு சிறுபான்மை இனம்.

சிறுபான்மை இனத்தாருக்கு வாக்குரிமையைக் காட்டிப் பயமுறுத்தும் வாய்ப்புகள் இல்லை. தேர்தல், திருவிழாக்களுக்கு நம் பணம் பயன்படுமே தவிர நம் இனம் பயன்படாது. சிறுபான்மை இனத்தார் எவராயிருந்தாலும் 'தன் கையே தனக்கு உதவி' என்றபடி, கல்வித் துறையிலும் தமக்குத் தேவையான உதவிகளைத் தாமே செய்துகொள்ள வேண்டும். எப்படி உதவி செய்வது? நம் உயர் கல்வித் தேவையை நம் ஓர் இனத்தாரால் மட்டும் நிறைவு செய்ய முடியுமா? முடியும்-முடியும்-முடியும்! மனமிருந்தால் மார்க்கமுண்டு. நம்முள், நாடு புகழும் கல்வியாளர்கள் உண்டு; அந்நியச் செலவாணியை ஆண்டுதோறும் கோடிக் கணக்கில் ஈட்டித் தரும் தொழில் மேதைகள் உண்டு; ஆலை அதிபர்கள், மலைத்தோட்ட முதலாளிகள், நான்கு இலக்கச் சம்பளம் வாங்குபவர்கள் ஏராளம். நம்மவர்களுக்கு அமெரிக்காவில் ஊர்; ஆஸ்திரேலியாவில் ஊர்; ஜப்பானில், ஜெர்மனியில், இலண்டனில், ஏன், உலகெங்கணும் ஊர்கள் உண்டு.

நம்மினத்தவர்களில் எழுதப் படிக்கத் தெரியாதவர்களேஇலர். நூற்றுக்கு நூறு எழுதப்படிக்கத் தெரிந்தவர் நம்மவர். உயர்கல்வி பெற்றவர்களின் எண்ணிக்கையும் ஓரளவு கணிசமானதே. நாம் சிறுபான்மையாக இருந்தாலும் நம் பொருளாதார வலிமை நாட்டின் பெரும்பான்மையான காரியங்களை நிறைவேற்ற உதவுகிறது.

கண்டனூரிலும் இராயவரத்திலும் அரிமளத்திலும் அண்மையில் நடந்தேறிய திருக்குட நன்னீராட்டு விழாக்களில் சொரியப் பட்டது கலசநன்னீர் மட்டுமன்று; நம் இனத்தவரின் உழைப்பு தந்த பணமுமே. கண்டனூரில் மாதச் சம்பளம் வாங்குவோர் தத்தம் சம்பளத்தில் பத்து சதவீதமாக மனமுவந்து அளித்த தொகை மட்டும் ஒன்றே முக்கால் இலட்சம் என்று கேள்விப்படுகிறேன். ஏறத்தாழ 650 குடும்பங்களில் உள்ள மாதச் சம்பளம் வாங்குவோரின் பத்து சதவீத நன்கொடையே இவ்வளவு என்றால், அவர்களின் மொத்த வருமானம் எவ்வளவு என்று அவர்கள் கோவில் நிகழ்ச்சிகளுக்குத் தரும் கொடைப்பணமே காட்டிவிடும். ஆதலால், நம்முடைய பொருளாதார வலிமை மிகவும் பெரியது. சக்தியை ஒரு சேரத் தொகுத்துத் திட்டமிட்டு வழி வகுத்தால் நம்மினத்தின் சக்தியே நமக்குத் தேவையான உயர்கல்வி வாய்ப்புகளைத் தர முடியும் என்று கருதுகிறேன்.

கணக்கெடுத்துப் பார்த்தால், ஒரே சமயத்தில் உயர்கல்விப் படிப்பில் ஈடுபடுகின்ற நம்மின மாணவர்களின் எண்ணிக்கை

ஏறக்குறைய 2000க்கு மேல் 3000க்குள் இருக்கும். இந்த எண்ணிக்கை ஒரு நடுத்தரப் பல்கலைக் கழகத்தின் அளவாகும். நம்மினத்து மாணவர்கள் அனைவரும் உயர்கல்வி பெற வாய்ப்புக் கொடுப்பதற்கு ஒரே ஒரு பல்கலைக் கழகம் போதுமானது. பல்கலைக் கழக மானியக் குழுவின் உதவியின்றி, அதன் விதிமுறைகளுக்கு உட்பட்டு ஒரு தனியார் பல்கலைக் கழகம் நடத்த முடியுமென்றால் நமக்குத் தலைவலியாக உள்ள உயர்கல்விச் சிக்கல் தவிர்க்கப்பட்டுவிடும். 'நடத்த முடியுமென்றால்' என்பதிலிருந்தே 'நடத்த முடியும்' என்ற நம்பிக்கை தொனிக்கிறது.

தனியார் பல்கலைக் கழகம் நடத்துவது, நம்மவருக்கு கடினமான காரியம் அன்று. இந்நாள் மத்திய அரசின் நோக்கமும் போக்கும், தனியார் துறையின் திசையை நோக்கிச் செல்வது வெளிப்படை. மத்திய அரசில் நம் இனத்தின் சார்பாளித்துவம் தெரிந்ததே. உரிய முறையில் சரியான தொலைநோக்கோடு, நம்மினத்துத் தளபதிகள் பத்துப் பதினைந்து பேர் மனம் வைத்து மத்திய அரசையும், பல்கலைக் கழக மானியக் குழுவையும் அணுகினால். அரசு பச்சைக்கொடி காட்டும். நம் உயர்கல்விப் பயணத்தை உரிய திசையில் செல்ல அனுமதி அளிக்கும்.

தொடக்கத்தில் மூன்று கோடி ரூபாயிலிருந்து ஐந்து கோடி ரூபாய்க்குள் தேவைப்படலாம். ஒவ்வொரு ஆண்டும் பல்கலைக் கழக நிருவாகத்திற்கு வேண்டிய பணம் சுமார் மூன்றுகோடிரூபாய். இவ்வளவு ரூபாய் தேவையா என்று மலைக்க வேண்டாம். நம் மினத்தவரின் மொத்தவருவாயில் இந்தக் கோடிகள் ஐந்து விழுக் காட்டுக்குக் குறைவாகத்தான் இருக்கும்.

மாதம் ஒன்றுக்கு, ரூபாய் 2000த்திலிருந்து பல இலட்சங் கள் வரை வருவாயுள்ள அத் தனை நகரத்தார்களின் வருமா னத்தையும் கணக்கிட்டுப் பார்த் தால் தற்சார்புப் பல்கலைக் கழ கத்தை நிறுவுவதற்குரிய ஆற்ற லும் வாய்ப்பும் வசதிகளும் நம் மினத்தில் உண்டு என்பது தெளி வாகும். அதனை ஒருங்கு திரட்ட நம் அனைவரின் மனமும் விரி வடைய வேண்டும். பெரியவர்—சிறியவர், பணக்காரர் - ஏழை, செல்வாக்குடையவர் என்று ஒரு வரை ஒருவர் ஒதுக்காமல், ஒதுங் காமல் அனைவரும் இதே சிந் தனையில் ஈடுபட்டு ‘நகரத்தார் தற்சார்புத் தனியார் பல்கலைக் கழக உண்டியல்’ என்று ஒரு திட்டத்தைத் தொடங்கினால், இந்நூற்றாண்டு நிறைவுக்குள் நகரத்தார் பல்கலைக் கழகப் பணியில், பங்கும் அக்கறையும் பொறுப்பும் பகிர்ந்துகொள்ளும் வாய்ப்பும் கிடைக்கும். இவ்வாறு பணம் திரட்டுவது நமக்குப் புதிய முறை அன்று. கோவில் பணிக்குப் புள்ளி வரி, ஆஸ்தி வரி, நன் கொடை, விளம்பரம், காணிக்கை என்று பல்வேறு வகைகளில் வசூ லிப்பது போல் வசூலிக்கலாம். ஒன்பது நகரக் கோவில்களிலும் உள்ளூர் நகரச் சிவன் கோவில் களிலும் பல்கலைக் கழக உண்டி யலை வைக்கலாம். மேலும், நம் மினத்து மாணவர்கள், இடம் இருந்து சேரும் பிற மாணவர்கள் ஆகியோரிடமிருந்து பொருளா தார அடிப்படையில் கல்விக் கட்டணம் (Fees) வசூலிப்பதாலும் தேவையான பொருள் திரளும்.

மேலும், வெளிநாடுகளில் பணியாற்றும் நம்மவர்கள், வங்கி களில் ‘வெளிநாட்டில் வாழ்பவர்’ கணக்குகளைத் திறக்கச் செய்து (N.R.S. Account) அதில் குறிப் பிட்ட சதவிகிதத்தைக் கொடை யாகப் பெறலாம். அதனால் மதிப்புக் கூடிய வெளிநாட்டுப் பணம் நம் நாட்டுக்கு வரும். தனிப்பட்டவர்கள் அரசு அளிக் கும் வரிச் சலுகை பெறுவர். நம் பல்கலைக் கழகநிதியும் பெருகும்.

பல்கலைக் கழக உண்டியலை நல்ல நாள் பார்த்து, உடனே தொடங்கி, நல்ல மனம் படைத்த கல்விப் பணியாளர்கள், செல்வர் கள் இப்பணியில் தொடர்ந்து ஈடுபடுவது இனி, காலம் தாழ்த் தாமல் உயர்கல்வித் துறையில் செய்யவேண்டிய முதல் பணியா கும்.

இத்தகைய பல்கலைக் கழகம் உருவாகி வளர்ந்து வரும்போது, இச்சூழ்நிலையைப் பயன்படுத்தி, நம் பகுதியிலேயே தொழில் வளங்களையும் பெருக்க முடியும். அதனால் பல்கலைக் கழக வளர்ச் சியும் கூடும்.

இக்கட்டுரை என் மூளையிற் பிறந்த சிந்தனையின் முன் வரைவு. நம்மினத்துப் பெரியவர்களும், அறிஞர்களும் சிந்தித்துக் கலந்துரையாடக் களம் அமையுமானால் கலந்து பேசுவோம். கல்வியை வளர்ப்போம். நாமும் வளர்வோம்.

வளர்க உயர்கல்வி! வாழ்க வையகம்!

நன்றி: கண்டனூர் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்குட நன்னீராட்டு மலர்.

பிள்ளை ஏன் சிவப்பாய் இருக்கிறது?

ஒரு பள்ளியின் நேர்முகத் தேர்வில் தலைமையாசிரியர் மாணவனைப் பார்த்து ''அப்பா கறுப்பு, அம்மா கறுப்பு பிள்ளை மட்டும் ஏன் சிவப்பாய் இருக்கிறது?'' என்று கேட்டார்.

அதற்கு அந்தப் பையன் ''சிலேட்டு கறுப்பு, கல்லுக்குச்சி கறுப்பு, எழுத்து மட்டும் ஏன் வெள்ளையாய் இருக்கிறது? அது போலத்தான் இதுவும்'' என்றான்.

ஃ ஃ ஃ

''எத் தெய்வத்தை வணங்கினாலும் நகரத்தார்கட்குக் குல தெய்வ வழிபாடே முதன்மையான வழிபாடாகும். கீழக்கோட்டையில் உள்ள எங்கள் குல தெய்வமாகிய காளியை வணங்கியமையே இத்துணை பெரிய கவிஞனாய் வர இயன்றது'' என கவிஞர் கண்ணதாசன் கூறியுள்ளார்.

— புலவர் மாமணி மா. முத்துராமன்

(சிராவயல் புதூர் அருள்மிகு திருமேனிக் கருப்பர் கோவில் குட நீராட்டு விழாவை யொட்டி 11-6-92 அன்று நடைபெற்ற கருத்தரங்கில்)



தேவகோட்டையில் 5-6-92 அன்று நடைபெற்ற சேக்கிழார் விழாவில் திருவாளர்கள் கண. சிற்சபேசன், வி. என். சிதம்பரம் செட்டியார், உ. மு. சுப லெ. அழ. அழகப்ப செட்டியார். பின்வரிசையில் கு. ஞானசம்பந்தம், எல். கே. சுபாஷ்சந்திரபோஸ், சொ. சொ. மீ. சுந்தரம்.

கண்டரமாணிக்கத்தில் குடநீராட்டு விழாக்கள்

கண்டர மாணிக்கம் அருள்மிகு மாணிக்க நாச்சியம்மன் திருக்கோவிலின் திருக்குட நன்னீராட்டு விழா ஆங்கிரஸ ஆண்டு ஆனித் திங்கள் 25 ஆம் நாள் (9–7-92) வியாழன் காலை 7-48 மணிக்குமேல் 8-48 மணிக்குள் நடைபெறவிருக்கிறது.

7-7-92 செவ்வாய் மாலை, யாகசாலைப் பூஜை தொடங்கி 9-7-92 காலை வரை நான்கு காலம் நடைபெற உள்ளது. 9-7-92 காலை 10-30 மணிக்கு மகாபிஷேகம். 11-30 மணிக்கு ஏகதின லட்சார்ச்சனை. இரவு 10 மணிக்கு பஞ்சமூர்த்திகள் புறப்பாடு.

அழகிய கண்ட விநாயகர் மற்றும் பெரியநாயகி அம்மன்

கண்டரமாணிக்கம் அழகிய கண்ட விநாயகருக்கு 9–7-92 காலை 7-48 மணிக்குமேல் 8-48 மணிக்குள்ளும் அருள்மிகு பெரியநாயகி அம்மன் சமேத கைலாசநாதருக்கும் மற்றும் பரிவார தேவதைகளுக்கும் 9-7-92 வியாழன் காலை 9-54 மணிக்குமேல் 10-54 மணிக்குள்ளும் திருக்குட நன்னீராட்டு விழாக்கள் நடைபெற உள்ளன.



நானும் ஒரு பெண்தாண்டி . . .

திருமதி சேதுக்கரசி சிதம்பரம், பொன். புதுப்பட்டி

ஆதி சிவனுரும் அகிலாண்ட ஈஸ்வரியும்
அன்னை முகம் பார்த்து அரசாள வந்த கண்ணே
ஓவியமே காவியமே உத்திமியாள் பெற்ற கண்ணே
தாவிவினை யாடவந்த தம்பியே கண்வளராய்

கண்ணே நவமணியே கனிரசமே கற்கண்டே
வண்ண மரிக்கொழுந்தே வளர்பிறையே கண்வளராய்
முத்து நவரத்தினமே முருகனருள் பெற்ற கண்ணே
தித்திக்கும் வாழ்வு தந்த செல்வமே கண்வளராய்

வாணி சரஸ்வதியே வளம் கொழிக்கும் லட்சுமியே
ஆனிப் பொன்மண்டபத்தில் அமைந்திருக்கும் தாயாரே
பூணரம் பூண்டவளே புவியாளும் நாயகியே
ஆணக என் வயிற்றில் அவதரிக்க வேணுமம்மா

மதுரை நகராட்சி மாமதுரை மீனுட்சி
காசி அரசாட்சி காணும் விசாலாட்சி
கட்டழகு காமாட்சி காஞ்சிநதி கொண்டவளே
தொட்டில் கட்டித் தாலாட்ட துணைபுரிய வேணுமம்மா

நீயும் ஒரு பெண்தாண்டி நெஞ்சிரக்கம் கொள்ளாயோ
தாயாக வேணுமென்று தவங் கிடந்து கெஞ்சுகிறேன்
நானும் ஒரு பெண்தாண்டி நாயகியே மீனுட்சி
வேணுமென்று நீ நினைத்தால் வெகுநேரம் ஆகாது

மாலைவடிவேலவனே மாதுமையாள் பாலகனே
கோலமயில் வாகனனே குன்றில் வளர்வேல் முருகா
கோழிக் கொடிக்குமரா குழந்தை வடிவேலவனே
தாலிகட்டி வாழ்ந்ததற்கு சாட்சி சொல்ல வேண்டுமையா

பாட்டை எழிதிவைத்தாய் படிப்பதற்கு என்னைவைத்தாய்
கேட்பதற்கு யாரைவைத்தாய் கேளாயோ என்குரலை
ஏட்டில் எழுதிவைத்தாய் எழுதியதை நானறியேன்
என்ன எழுதிவைத்தாய்? இறைவா நீ சொல்லாயோ

திருமணம்

எஸ். சொக்கனாதபுரம் ஐயப்ப குருசாமி திரு. கண. மு. ராம. முத்தையா செட்டியார் புதல்வன் மணி B. B. A., M. Com. க்கும் ஒ. புதூர் திரு. பெ. அ. சுப்பிர மணியன் செட்டியார் புதல்வி முருகவல்லி என்ற புனிதாவிற்கும் 15-5-92 அன்று குமாரவேலூரில் திருமணம் சிறப்பாக நடை பெற்றது.

திருமணத்தில் தொழிலதிபர் கள் திருவாளர்கள் குமாரவேலூர் என். தியாகராஜன், வி. என். சிதம்பரம் செட்டியார், சிக. அரு. சோம. இராமநாதன் செட்டியார், என். இராமசாமி செட்டியார், என். மாணிக்கம் செட்டியார், ஆர்எம். முத்துப்பழநியப்ப செட்டி யார், எம். கண்ணப்பன், கலை மகள் நடராஜன் செட்டியார், பிஎல் அடைக்கப்ப செட்டியார், அழ. அரு. சோம. நாராயணன் செட்டியார் மற்றும் நண்பர்களும் திரளாகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

காவிரிப்பூம்பட்டினம் பேரவை நிகழ்ச்சி

காவிரிப்பூம்பட்டினம் ஸ்ரீ பட் டினத்தடிகளின் அற்புதத் திருவி ழாவின் பேரவை நிகழ்ச்சிகள் 8-8 92 முதல் 10-8-92 வரை 3 நாட்கள் நடைபெற உள்ளன. பேரவை நிகழ்ச்சியை முனைவர் திரு. ச. மெய்யப்பன் 8-8-92 காலை 10-30 மணிக்குத் தொடங்கி வைக்கிறார். அதனைத் தொடர்ந்து 'காசிஸ்ரீ' திரு. அரு. சோ. 'சிறுத் தொண்டர் சரித்திரம்' பற்றிப் பேசுகிறார்.

4-8-92, 8 8-92 & 11-8-92 ஆகிய மூன்று தினங்களிலும் சிறப்பு நாதசுரக் கச்சேரி நடை பெற உள்ளது.

திருமணம்

ஒக்கூரைச் சேர்ந்த பேராசிரி யர் திரு. சே. கண்ணப்ப செட்டி யாரின் புதல்வி செல்வி விஜய லெட்சுமி என்ற பருவதத்திற்கும் அலவாக்கோட்டை திரு. சுப. பழ. நா. கரு. நாராயணன் செட்டியாரின் புதல்வன் செல்வன் கருப்பன் செட்டி என்ற சத்திய மூர்த்தி B. Sc., D. C. S. க்கும் 28-5-92 அன்று ஒக்கூரில் திரு மணம் சிறப்பாக நடைபெற்றது.

ஃ ஃ ஃ

மதுரை ஸ்ரீ தேவி டைப் பவுண்டரி உரிமையாளர் செவ் வூர் திரு. கரு. அண்ணாமலையின் புதல்வி செல்வி தேவி என்ற தெய்வானை B. Com. க்கும் சிவ யோகபுரம் மிதிலைப்பட்டி டாக்டர் திரு. எல். வேலாயுதம் செட்டி யாரின் புதல்வன் டாக்டர் சங்கர் லெட்சுமணன் M.B. B. S க்கும் செவ்வூர் மணமகள் இல்லத்தில் 21-5-92 அன்று திருமணம் சிறப் பாக நடைபெற்றது.

ஃ ஃ ஃ

தேவகோட்டை காசி ஸ்ரீ திரு. ஆர். வயிரவனின் புதல்வ னும் திரு. மாணிக்கம் செட்டியா ரின் சுவீகார புத்திரனுமாகிய இராமநாதனுக்கும்—மீனாட்சிக்கும் 4—6—92 அன்று காலை தேவ கோட்டையில் திருமணம் சிறப் பாக நடைபெற்றது. அவ்வமயம் நிகழ்ந்த வாழ்த்தரங்கில் காசிஸ்ரீ திரு. அரு. சோமசுந்தரன், கவிஞர் திரு. இளங்கோ ஆகியோர் மணமக்களை வாழ்த் தினர்.


ஃ நகரக் கோவில்கள் ஒன் பதில் ஒன்றான இரணியூர்க் கோவிலின் வருடாபிஷேக விழா 11-7 92சனிக்கிழமை நடைபெற விருக்கிறது.

திறமைசாலிகள் !

மதுரையில் நாம் 5, 000 பேர் இருக்கிறோம். நமது இளைஞர் சங்கத் தலைவர் திரு. இரா. சொக்கலிங்கத்தையும் மணமகன் - தம்பி இராமசாமியையும் ஒரு தட்டில் நிறுத்தி நான் உட்பட மற்ற 4998 பேரை மற்ற தட்டில் நிறுத்துவோமானால் அவர்கள் இருவரும் உள்ள தட்டுதான் கீழே இருக்கும். அவர்கள் இருவரும் அவ்வளவு திறமை சாலிகள் ! செயல் வீரர்கள் !

— வி என். சிதம்பரம் செட்டியார்

(விரையாச்சிலையில் 11-6-92 அன்று நடைபெற்ற திரு. பழ. இராமசாமி – ஜானகி என்ற ஷீலா திருமண வாழ்த்தரங்கத்தில்)



வழக்கறிஞர் திரு. பழ. இராமசாமி - ஜானகி என்ற ஷீலாவின் திருமண வாழ்த்தரங்கத்தில் (11-6-92) திரு. வி. என். சிடி. அவர்கள வாழ்த்துரை வழங்குகிருர்கள். அருகே திரு. சொ. சொ. மீ. சுந்தரம், முனைவர் திரு. தமிழண்ணல், வழக்கறிஞர் திரு பி. எம். கதிரேசன், திரு. இரா. சொக்கலிங்கம்.

திருமணம்

மேலைச்சிவபுரி திரு. இராம. பழநியப்ப செட்டியாரின் புதல் வரும் மதுரை நகரத்தார் இளை ஞர் சங்கத்தின் செயலாளரும் வழக்கறிஞருமான திரு. பழ. இராமசாமி B.A.B.L. (M.L.)க்கும் விரையாச்சிலை திரு. மீ. சிதம்பரம் செட்டியாரின் புதல்வி ஜானகி என்கிற ஷீலாவிற்கும் 11-6-92 அன்று விரையாச்சிலையில் திருமணம் சிறப்பாக நடை பெற்றது.

திருமணத்தையொட்டி வழக் கறிஞர் திரு. பி. எம். கதிரேசன் தலைமையில் வாழ்த்தரங்கம் நடை பெற்றது. திருவாளர்கள் வி என். சிதம்பரம் செட்டியார், ஏ. திருநாவுக்கரசு செட்டியார் கரு முத்து சு சொக்கலிங்கம் செட்டி யார், கலைமகள் இராம. நடராஜன் செட்டியார், முனைவர் தமிழண் ணல், பேராசிரியர் சொ. சொ மீ சுந்தரம், அரு. நாகப்பன் வழக் கறிஞர் திரு. ஜஹாங்கீர் பாதுஷா, செஷன்ஸ் நீதிபதி திரு. விவேகானந்தன், கல்லூரி முதல்வர் திருமதி விவேகானந் தன், திரு. சிங்காரம் செட்டி யார், திரு. அடைக்கலவன், திரு. பி. எஸ். ஆர் எம். ஏ. இராம சாமி. திரு. ஏ. எல். முருகப்பன் ஆகியோர் வாழ்த்துரை வழங் கினர். மணமகன் திரு. பழ. இராமசாமி நன்றி கூறினர்.

மதுரை நகரத்தார் இளைஞர் சங்கத் தலைவர் திரு. இரா. சொக் கலிங்கம் நிகழ்ச்சிகளை அமைத்து உதவினர்.

மணமக்களை வாழ்த்தி சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி திரு ஏ ஆர். லெட்சுமணன் இந்தியன் வங்கியின் தலைவர் திரு. எம். கோபாலகிருஷ்ணன் பொது மேலாளர் திரு. எஸ். டி. சுப்பையா மதுரை வங்கியின் தலை வர் திரு. சுப. சபாபதி போன்ற வர்களிடமிருந்து ஏராளமான வாழ்த்துச் செய்திகள் வந் திருந்தன.

முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் :
22-1-1917



மறைவு :
11-6-1991

கொப்பனாபட்டி

மு. ப. மு. பழ. மீனாட்சி ஆச்சி

சென்ற ஆண்டு இதே நாளில் எங்களை விட்டுப் பிரிந்த
எங்களின் அன்புத் தெய்வம்

மு. ப. மு. பழ. மீனாட்சி ஆச்சி

அவர்களுக்கு எங்கள் அஞ்சலி.

உரிமையாளர்கள், அலுவலர்கள்,
தொழிலாளர்கள்:

மீனாட்சி அன் கோ., திண்டுக்கல், சென்னை
விஜயலெட்சுமி இண்டஸ்ட்ரீஸ், திண்டுக்கல், சென்னை
மு. பழ. பழநியப்ப செட்டியார் பார்ம், பட்டுக்கோட்டை.
பார்ஸ் எஸ்டேட், ஏற்காடு.
சுப்பு பைனான்ஸ் கார்ப்பரேஷன், மதுரை.

சாதனையாளரை இழந்தோம்

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் கோட்டையூரைச் சேர்ந்த, 'லைப்ரரி சர்வீஸ் இந்தியா' என்ற அரிய, பெரிய நூலகத்தின் நிறுவனர் ரோஜா முத்தையா அவர்கள் தமது 66 ஆம் வயதில் 4-6-92 அன்று இயற்கை எய்தினர்கள் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமது 22 ஆவது வயதில் (1948ல்) சென்னை ஆயிரம் விளக்குப் பகுதியில் 'ரோஜா ஆர்ட்ஸ்' என்ற பெயரில் சிறிய கலைக்கூடம் ஒன்றைத் தொடங்கி பல்வேறு வண்ண ஓவியங்களையும் விளம்பரப் பலகைகளையும் உருவாக்கிக் கொடுத்ததால் திரு. முத்தையா, அதுமுதல் 'ரோஜா முத்தையா' ஆனர்.

சென்னையில் இருந்தபோது தாம் சேகரித்த புத்தகங்களைப் பாதுகாத்து வந்த அவர், அவ்வப்போது அவற்றைப் படித்தும் வந்தார். அப்போது அவற்றின் அருமையையும் தமிழ் மொழியின் சிறப்பையும் உணர்ந்து 'ரோஜா ஆர்ட்ஸ்' பணியை விட்டு விட்டு புத்தகங்கள் சேகரிப்பதில் ஆர்வமாக ஈடுபட்டார். பின்னர் தாம் சேகரித்த புத்தகங்களுடன் கோட்டையூர் வந்து நூலகத்தைத் தொடங்கி அதனை கொஞ்சம் கொஞ்சமாக விரிவு படுத்தினர்.

கோட்டையூரில் உள்ள ரோஜா முத்தையாவின் நூலகத்தில் இல்லாத நூல்களே இல்லை எனலாம். தமிழ் இலக்கண, இலக்கிய நூல்கள் மருத்துவம், சோதிடம், தத்துவம், வரலாறு, நாடகம், இசை, கலைக் களஞ்சியத் தொகுப்புகள், அகராதிகள் போன்ற ஒரு இலட்சம் நூல்கள் அங்கு உள்ளன

நாளிதழ்கள், வார இதழ்கள், மாத இதழ்களில் வெளியான பல்வேறு வகையான கட்டுரைகள் 150 ஆண்டுகளுக்கு முற்பட்ட வங்கிக் காசோலைகள், டிராப்ட்டுகள், பழைய கால ஆவணங்கள், கைவினைப் பொருட்கள் பழங்காலத்தில் கடல் வாணிகம் மூலம் ஏற்றுமதி இறக்குமதி செய்ததற்கான விவரங்கள் நகரத்தார் பற்றிய ஏராளமான நூல்கள் 100 ஆண்டுகட்கு முற்பட்ட நாடக, திரைப்பட துண்டுப் பிரசுரங்கள் போன்ற அரிய சேகரிப்புகளும் அங்கு உள்ளன.

தமிழில் எம். ஃபில், பி.எச்.டி. பட்டங்கள் பெறுவதற்காக ஆய்வு மேற்கொள்பவர்களுக்கு இந்த நூலகம் பெரிதும் உதவியாக



இருக்கிறது. தமிழகத்திலிருந்து மட்டுமல்லாது வெளி மாநிலங்களிலிருந்தும் ஜப்பான், ஜெர்மனி, அமெரிக்கா, சிங்கப்பூர் போன்ற வெளி நாடுகளிலிருந்தும் ஆய்வாளர்கள் பலர் இந் நூலகத்தைத் தேடி வந்து பயன் பெற்று வருகின்றனர்.

1926ல் பிறந்த திரு. ரோஜா முத்தையா 1960ல் திருமணம் செய்து கொண்டார். இவருக்கு திருமதி சிவகாமி ஆச்சி என்கிற மனைவியும் திரு. நாராயணன் என்கிற புதல்வரும் வள்ளிக்

கண்ணு என்கிற புதல்வியும் உள்ளனர். புதல்வன் திரு. நாராயணன் பி. காம். படித்து விட்டு சென்னையில் ஒரு தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார். பி. ஏ. படித்துள்ள புதல்வி தந்தைக்கு உதவியாக நூலகத்தைக் கவனித்து வருகிறார்.

திரு. ரோஜா முத்தையா வின் நூலகப் பேராலயத்தை அரசு, அல்லது பல்கலைக்கழகம் எடுத்துக் கொள்கிறதோ இல்லையோ காரைக்குடி திரு. ஏ. திருநாவுக்கரசு செட்டியார் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு குழு திரு. ரோஜா முத்தையா உயிருடன் இருந்தபோது அவருக்கு ஒரு விழா எடுத்துப் பொற்கிழி வழங்கி அவருடைய நூலகப் பேராலயத்தைப் பெற்றுப் பேணிக் காக்கத் திட்டமிட்டு அதற்கான முயற்சியில் ஈடுபட்டு வந்தது. அம் முயற்சி கூடிய விரைவில் நிறைவேறும் என நம்புகிறோம்.

— எல். சுந்தரம

திருச்செந்தூர் பாத யாத்திரை

காரைக்குடி ஸ்ரீகொப்புடைய நாயகி அம்மன் கோவிலிலிருந்து 22–5–92 அன்று சுமார் 40 பேர் பாத யாத்திரையாகப் புறப்பட்டு 31–5–92 அன்று திருச்செந்தூர் சென்றடைந்து முருகனுக்குக் காவடி செலுத்தி அபிஷேகம் செய்து வழிபட்டனர். கா. முத்துப்பட்டணம் காசிஸ்ரீ ப. அருணாசலஅய்யா தலைமையில் திரு. ஏ ஆர். வள்ளியப்பன் அமைப்பாளராக இருந்து சிறப்பான ஏற்பாடுகளைச் செய்தார் திரு. ஏ ஆர். வள்ளியப்பன் உபயமாக அளித்த வேலை திரு. எம் ஆர். இராமசாமி பாத யாத்திரையின் போது கொண்டு சென்றார்.

பாராட்டுகிறோம்

சிதம்பரம், அரசு பெண்கள் மேனிலைப் பள்ளியின் மாணவி செல்வி எஸ். ஜானகி கடந்த மார்ச்' 92ல் நடைபெற்ற +2 பொதுத் தேர்வில் 1200க்கு 1137 மதிப்பெண்கள் பெற்று அமோகத் தேர்ச்சி பெற்றுள்ளார்.

சிதம்பரம் நகரில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும், கடலூர் கல்வி மாவட்டத்திலும் முதலாவது இடத்தையும் தென்னாற்காடு மாவட்டத்தில் இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளார்.



செல்வி எஸ். ஜானகி கீழச்சிவல்பட்டியைச் சோந்த திரு. ராம. சித. சுப்பையா - திருமதி சுப. தெய்வானை ஆச்சியின் புதல்வியாவார்.

செல்வி எஸ். ஜானகி கணிதத்தில் 200 க்கு 199 மதிப்பெண்களும் பௌதிகத்தில் 200 க்கு 197 மதிப்பெண்களும் பெற்றிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். செல்வி ஜானகிக்கு நம் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


நகரக் காவடிக்குச் சீட்டுக் குலுக்கல்

வருகிற ஆவணி மீ 5உ (21-8-92) கார்த்திகை தினத்தன்று பரங்குன்றத்திற்குப் பால் குடங்களும் காவடிகளும் எடுத்துச் செல்லப்படவிருக்கின்றன. அதற்காக 20-7-92 திங்கட்கிழமை மாலை 6-30 மணி அளவில் வடுகக்காவல் கூடத் தெரு 20 ஆம் எண், பேராசிரியர் திரு. சொ. சொ. மீ. சுந்தரம் இல்லத்தில் நகரக் காவடிக்குச் சீட்டுக் குலுக்கப் பெறும் என அறிவிக்கப் பெற்றுள்ளது.


காவிரிப்பூம்பட்டினத்தில் திருவிளக்குப் பூஜை

காவிப்பூம்பட்டினத்தில் நகர விடுதியில் 7-8-92 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்குத் திருவிளக்குப் பூஜை நடைபெற உள்ளது. மேற்படி பூஜைக்கு விளக்கு வாங்கிக் கொடுத்தவர்கள் 5-8-92 புதன் மாலை 6 மணிக்குள் திருவிளக்குப் பூஜையில் கலந்து கொள்கிற விவரத்திற்கு திரு. நா. அரு. கா. அருணாசலம் செட்டியார், நகர விடுதி, காவிரிப்பூம்பட்டினம் 609105 (வழி) மயிலாடுதுறை, தஞ்சை மாவட்டம் என்ற முகவரிக்குத் தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள்.


எக்ஸ்போ பிரிண்டர்ஸ், 20, கிருஷ்ணபுரம் 4-வது குறுக்குத் தெரு, மதுரை-625 009ல் அச்சிட்டு சுப. அ. நடராசன் அவர்களால் அதே முகவரியிலிருந்து வெளிடப் பெறுகிறது. ஆசிரியர்: வி. என். சிதம்பரம்.



கொப்பனாபட்டி பழ. லெ. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் பேத்தியும் திரு. சொ. லெட்சுமணனின் புதல்வியுமான செல்வி அழகம்மைக்கும் வேந்தன்பட்டி திரு. ந. சிங்காரம் செட்டியாரின் புதல்வன் செல்வன் நல்லகுமார் என்ற செந்தில்குமார் L. Tech. D. P. I. M. க்கும் கொப்பனாபட்டியில் 21-5-92 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது. மணமக்களுடன் சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி திரு. அரு. லெட்சுமணன் அவரது துணைவியார் திருமதி மீனாட்சி ஆச்சி மற்றும் மணமகளின் பெற்றோர்.



மேற்படி திருமணத்திற்கு வருகைதந்த நீதிபதி திரு. அரு. லெட்சுமணன் அவர்களை பழ. லெ. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் வரவேற்கும் இனிய காட்சி.



''கண்ணதாசன் கவிதைகள் ஒரு கண்ணோட்டம்'' ஒலிப்பேழை வெளியீட்டு விழாவில் திருமதி இளம்பிறை மணிமாறன், செல்வி லீலா, திரு. வி என். சிடி. தவத்திரு குன்றக்குடி அடிகளார், திரு. தமிழருவி மணியன், திரு. இரா. சொக்கலிங்கம், திரு. அரு. நாகப்பன், திரு. த. ராஜாராம்.

Regd. No. TN / MA / (C) / 106 NAGARATHAR KURAL